Registered at the G. P. O as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி எண் 46

மலர் 4 யாழ்ப்பாணம், பிலவ பங்குனி 1 ஆம்நாள் ஷவ்வால் 19 (26-3-62) திங்கட்கிழமை இதழ் 44




# வங்கி ஊழியர் இன்று

## வேலைக்குத் திரும்புவர்

### ஆயிரம்பேர் ஆதரவு 40 பேர் எதிர்ப்பு

கொழும்பு, திங்கள்

மூன்று மாதகாலமாக நடைபெற்றுவந்த வங்கி ஊழியர் வேலைநிறுத்தம் முடிவடைந்து வேலை நிறுத்தம் செய்துவந்த வங்கி ஊழியர்கள் யாவரும் இன்று திங்கட்கிழமை காலை வேலைக்குத் திருப்புகிறார்கள்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை அரசாங்க சேவைக் குமாஸ்தாக்கள் யூனியன் தலைமைக் காரியாலயக் கட்டிடத்தில் வங்கி ஊழியர் சங்கத்தின் கூட்டமொன்று நடைபெற்றது.

வங்கி ஊழியர்களை இன்று வேலைக்குத் திரும்புமாறு கேட்டுக்கொள்ளும் பிரேரணை இக் கூட்டத்தில் கொண்டுவரப்பட்டது. பிரேரணைக்கு ஆதரவாக ஆயிரம் வாக்குகளும் எதிராக 40 வாக்குகளும் கிடைத்து தீர்மானம் நிறைவேறியது.

## ஜம்முவில் பொலிசார் துப்பாக்கிப்பிரயோகம்

ஜம்மு, மார்ச் 25

ஜம்மு காஷ்மீரில் பிரஜாபரிஷத் கட்சியினர் நடத்திய ஒரு ஆர்ப்பாட்டத்தைக் கலைப்பதற்கு பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகமும் தடியடிப் பிரயோகமும் செய்யநேரிட்டது.

ஆர்ப்பாட்டக்காரர்களின் கல்வீச்சினால் பத்துப் பொலிஸார் காயமடைந்தனர். இவர்கள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். பொலிசாரின் தடியடிப்பிரயோகத்தினாலும் துப்பாக்கிப் பிரயோகத்தினாலும் காயமடைந்த 16 பேர்களும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்,

ஜம்முவில் 144 தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதுவரை 8 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். 17 பேர் தலைமறைவாயுள்ளனர்.

## பிரஞ்சு ஹைகமிஷனர்

### அல்ஜீரியா சேர்ந்தார்

அல்ஜியர்ஸ், மார்ச் 25

அல்ஜீரியாவுக்குப் புதிதாக நியமிக்கப்பட்ட பிரஞ்சு அரசாங்க ஹைகமிஷனர் இன்று அல்ஜியர்ஸ் வந்து சேர்ந்தார் அல்ஜீரியாவில் சண்டை நிறுத்தத்தை அமுலுக்குக்கொண்டு வருவதற்கும் அல்ஜீரியாவில் அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்கான ஜனாதிபதி டிகாலின் புதிய உத்தரவுகளையும் கொண்டு புதிய கமிஷனர் திரு. கிறிஸ்தியன் பூகட் இன்று வந்துசேர்ந்தார்.

## 200 மாணவர் கைது

டாக்கா, மார்ச். 25

டாக்காவில் நேற்று மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியதைத்தொடர்ந்து 200 மாணவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

## தலாய்லாமா டில்லி திரும்பினர்

புதுடில்லி, மார்ச் 25

மைசூர் ராஜ்யத்துக்குச் சென்றிருந்த தலாய்லாமா இன்று புதுடில்லி திரும்பி பிரதமர் நேருவையும் உப ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன், கல்வி மந்திரி டாக்டர் ஸ்ரீமாலி ஆகியோரையும்சந்தித்துப் பேசினர்.

மைசூரில் திபெத் அகதிகளுக்கு புனர்வாழ்வளிக்க செய்யப்பட்டுள்ள ஒழுங்குகளை அவர் "பிரமாதம்" என்று பாராட்டினர்.

## மாசேதுங் சுகவீனம்?

பீகிங், மார்ச் 25

சீன கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. மாசேதுங் சுகவீனமாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர் கடந்த ஒரு மாதகாலமாக பொது வைபவங்களில் கலந்துகொள்ளவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் செய்தி கற்பனை பண்ணப்பட்ட செய்தியென்று சீன தகவல்இலாகா தெரிவித்துள்ளது.

## தீவிபத்தினால் ஒன்றரைக்கோடிசேதம்

கல்கத்தா, மார்ச் 25

இந்திய நேபாள எல்லையிலுள்ள ஒரு கைத்தொழில் நகரமான பிராத் நகரில் தீபற்றிக்கொண்டதால் சுமார் ஒன்றரை கோடி ரூபாய் பெறுமதியான பொருள்கள் சேதமடைந்தன. துணி, மருந்துவகைகள் உணவுப்பொருள்களெல்லாம் தீப்பிடித்து சாம்பலாகின.

## ஒரு லட்சம் ஊட்ட மருந்து அமெரிக்காவிலிருந்து இங்கு வரும்

### வாதநோய் தடுப்புக்கு அந்நியநாடுகள் உதவி

கொழும்பு. ஞாயிறு

இளம் பிள்ளை வாத நோய் தடுப்பு ஊட்ட மருந்து அனுப்பி உதவுமாறு அமெரிக்காவுக்கும் கனடாவுக்கும் இலங்கை வேண்டுகோள்விடுத்துள்ளது. அமெரிக்காவிலிருந்து ஒரு லட்சம் ஊட்ட மருந்தும் கனடாவிலிருந்து 50,000 ஊட்ட மருந்தும் விரைவில் இலங்கை வந்து சேருமென எதிர்பார்கப்படுகிறது.

சோவியத் யூனியன் மாஸ்கோவிலிருந்து விமானத்தில் அனுப்பப்பட்டுள்ள 2 லட்சம் டோஸ் இளம்பிள்ளை வாத நோய் தடுப்பு ஊட்ட மருந்து நாளை திங்கட்கிழமை அதிகாலை இந்திய விமானப்படை விமானமொன்றில் இலங்கை வந்து சேருமென எதிர் பார்க்கப்படுகிறது.

மாஸ்கோவிலிருந்து இன்று புதுடில்லி வந்து சேர்ந்த இளம் பிள்ளை வாதநோய் தடுப்பு மருந்துகள் புதுடில்லி விமான நிலையத்தை வந்தடைந்த ஒரு மணி நேரத்துக்குள் இந்திய விமானப் படையைச் சேர்ந்த ஒரு விமானத்துக்கு மாற்றப்பட்டது.

சோவியத் யூனியனின் இத் தடுப்பு மருந்துகள் இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் நாளை அதிகாலையில் இலங்கை வந்து சேரும்.

சென்ற ஞாயிற்றுக்கிழமை பிரிட்டனிடமிருந்து இலங்கைக்கு வந்துசேர்ந்த 50,000 'டோஸ்' இளம்பிள்ளை வாதத் தடுப்பு நோய் மருந்து முடிவடையுந் தறுவாயிலுள்ளது.

இளம் பிள்ளை வாத நோய் பற்றி சுகாதார அதிகாரிகள் இன்று விடுத்த ஒரு அறிக்கையில் நிலைமை கட்டுக்கடங்கியுள்ளதாகவும் பரபரப்படைவதற்கு எதுவுமில்லை யென்றும் தெரிவித்துள்ளனர்.

## 'தேசிய கல்வித்திட்டம் புதிய நிலையை உருவாக்கும்'

### தமிழாசிரியர் மகாநாட்டில் திரு. தம்பர் பேச்சு

யாழ்ப்பாணம், திங்கள்

'மிகவும் குறைவாகக் கணிக்கப்பட்டுவந்த சுயபாஷைபாடசாலைகள் மிகவிரைவில் உயர்ந்த ஸ்தானத்தைப் பெறும். அரசாங்கத்தின் தேசிய கல்வித் திட்டம் பழைய நிலையை மாற்றி புது நிலையைஉருவாக்க மிகவும் உதவுவதாக விருக்கிறது'

இவ்வாறு யாழ்ப்பாணம் அரசினர் மத்திய கல்லூரி அதிபர் திரு. ஏ. இ. தம்பர் யாழ்ப்பாணம் மகாவித்தியாலய மண்டபத்தில் நேற்று நடைபெற்றஅகில இலங்கை அரசினர் தமிழாசிரியர் சங்க வடபகுதிக் கிளையின் வருடாந்த மகாநாட்டில் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு டி. எம். சுவாம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற மகாநாட்டில் திரு. தம்பர் தொடர்ந்து பேசியதாவது:-

ஒவ்வொரு சுதந்திர நாடும் தனது நாட்டுக்கு உகந்த கல்வி எது என ஆராய்ந்து அதை மக்களுக்குப் புகட்ட நடவடிக்கை எடுத்துள்ளது. சுதந்திரநாடான இலங்கையும் இது விஷயத்தில் புத்திசாலித்தனமாகவே தேசிய கல்வித்திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. சிலர் அராங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்றது பற்றி குறைகூறிவருகிறார்கள். ஆனால் இவர்கள் விரைவில் இதன் நன்மையை உணர்வார்கள்.

கிராமப்புறங்களிலுள்ள சுயபாஷை பாடசாலைகள் வரும் காலங்களில் ஆலயங்களாகக் கணிக்கப்படும். பழையமரபுகளையும், பண்புகளையும் பேணிக் காக்க இவை உதவும் என்பதில் ஐயமில்லை.

தமிழ்ப்பாடசாலைகள்தான் மாணவர்களுக்கு ஆதாரக்கல்வி புகட்டும் இடமாக அமையும். அங்குதான் இலக்கியமும் கலையும், கலாசாரமும் வளர்க்கப்படும். தமிழ் ஆசிரியர்கள் தமக்குள்ள பொறுப்பை உணர்ந்து இந்தத் துறைகளில் அறிவை வளர்க்க முயற்சி செய்யவேண்டும். தமிழைமட்டும்கற்பதோடு நிறுத்திக்கொள்ளாது ஆங்கிலத்தையும்கற்று அறிவை வளர்த்துக்கொள்ள வேண்டும். புது எண்ணங்களை வளர்க்க இது நன்கு உதவும்.

தமிழ்நாட்டில் ஏழை மக்களின் வாழ்வுநிலைக்கேற்ற கலை வளர்க்கப்பட்டது. தமிழ்த் தாய் தனது இல்லத்திலுள்ள பானை, விளக்கு இவற்றை அழகுபடுத்தி அழகையும் கலையையும் வளர்த்துவந்தாள். கோலம்போட்டு மனை அலங்காரம் செய்து அகத்தை அழகுறச் செய்தாள். தற்காலக்கல்லூரிகள் நிறுவமுன்னர் அக்காலத் தமிழகத்தில் விளங்கிய சிறப்பு அம்சங்கள் இவை.

தற்கால நவீன வசதிகளுடைய பாடசாலைகள் தமிழ் மாணவர்கள் தமது பழைய கலாசாரத்தை மறந்துவிடாது நினைவில் வைத்துக்காப்பாற்றி வளர்க்கப் பெரிதும் உதவ வேண்டும். தேசிய தேவைக்கேற்ப புதுமையான கல்வியை விருத்திசெய்வதோடு நல்ல கலாசாரத்தையும்பேணிவளர்க்

(8-ம் பக்கம் பார்க்க)

## 7 ஆண்டுகளுக்குள் 70 கோடி தொன் எண்ணெயை ரஷ்யா தயாரிக்கும்

கொழும்பு, ஞாயிறு

'ரஷ்யாவின் 7 ஆண்டுத்திட்டத்தின்படி 1980-ம் ஆண்டுக்குமுன்னர் 70 கோடிதொன் எண்ணெயை ரஷ்யா உற்பத்தி செய்யும்' என ரஷ்ய எண்ணெய்க்கப்பலின் காப்டன் திரு. ஏ. ஜி. கசிமினேவ் தெரிவித்தார்.

இலங்கைக்கு எண்ணெய் ஏற்றிவந்த 'கிர்கூவ்' எனும் ரஷ்யக் கப்பலின் காப்டனுக்கும் மாலுமிகள் கோஷ்டிக்கும் சனிக்கிழமை மாலை இலங்கை சோவியத் நட்புறவுச் சங்கத்தினால் அளிக்கப்பட்ட வரவேற்பின்போதே திரு. ஏ. ஜி. கசிமினேவ் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. கசிமினேவ் மேலும் பேசுகையில் ரஷ்யா, ஆசிய ஆபிரிக்க நாடுகளுடன் வியாபாரத்தொடர்புகளை ஏற்படுத்திவருகிறது என்றும் மேலும் தொடர்புகளை வளர்க்க ரஷ்யா விரும்பியுள்ளது என்றும் தெரிவித்தார்.

மேற்கு இரியான்

## புதிதாக கைகலப்பு

ஆம்ஸ்டர்டாம், மார்ச் 25

மேற்கு இரியான் கரையோரத்தில் இந்தோனேஷிய ராணுவத்தினருக்கும் டச்சு அரசாங்கத் துருப்புகளுக்குமிடையில் இன்று புதிதாகக் கைகலப்பு ஏற்பட்டதாக டச் அரசாங்கம் அறிவித்தது. ஆனால் இச் செய்திபற்றி இந்தோனேஷியா தகவல் எதுவும் இதுவரை தெரிவிக்கவில்லை.

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலைமையிலுள்ள EL தொடர்பிலக்கமுள்ள ஹில்மன் மிங்ஸ் கார் விற்பனைக்குண்டு. நேரில் பார்வையிடலாம். 36, 4-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

### தேவை

வியாபாரத்தில் அனுபவமும் ஆங்கிலம்-தமிழ் எஸ்.எஸ்.ஸி. படித்தவருமான ஒருவர் தேவை. வயது 18க்கும் 24க்கும் இடையில் உள்ளவர்கள் விரும்பத் தக்கது. விபரங்கட்கு (ஷ்பலஸ்) 51, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். நேரில் வரவும்.

### தேவை

ஒரு அச்சகத்திற்கும் அதனோடு சேர்ந்த புத்தகசாலைக்கும் பொறுப்பாக எடுத்து நடத்தக்கூடிய நம்பிக்கை வாய்ந்த ஒருவர் தேவை. அச்சக அனுபவம் வாய்ந்தவராக இருத்தல் நலம். சம்பளம் ரூ. 150. இலாபத்தில் ஒரு பகுதியும் கொடுக்கப்படும். பிணை ரூ. 5000. அத்தாட்சிப்பத்திரங்களுடன் 26-3-62 க்கு முன் விண்ணப்பிக்கவும்.

பெட்டி எண் PX 132
C/o ஈழநாடு,
த. பெ. எண் 49,
யாழ்ப்பாணம்.

## உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணாநந்தர்.
கைலாசபிள்ளையார் கோவிலடி
யாழ்ப்பாணம்.

### மட்டுவில் வடக்கு காலஞ்சென்ற
### பிரம்மஸ்ரீ ந. பொன்னுச்சாமிக் குருக்கள் அவர்களின் தசாக விஞ்ஞாபனம்

அன்புடையீர்:

நிகழும் பிலவ வருஷம் பங்குனி மாதம் 15-ந் திகதி (28-3-62) புதன்கிழமை காலை 8 மணியளவில் எனது தந்தையாரின் தசாகம் (கல்லெடுப்பு) நிகழவிருப்பதால் அவ்வமயம் அன்னாரின் அன்பர்கள் யாவரையும் சமுகமளிக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கிறேன்.

அன்னாரின் மரண தினத்தன்று சமுகமளித்த அன்பர்களுக்கும், சமுகமளிக்க முடியாதிருந்த அன்பர்களுக்கும் தனித்தனி அறிவிக்க முடியாதிருப்பதால் இவ்வறிவித்தலை அன்புடன் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் தயவாகக் கேட்டுக்கொள்கிறேன்.

இங்ஙனம்
பொ. சோமசுந்தரசர்மா

## மரணச் செய்தி

கொழும்பு, செட்டித் தெரு, 37-ம் கடை அதிபர் ஆ. வைத்தியலிங்கம் அவர்களின் மைத்துனரும் நுவரெலியா டாக்டர் பாலசிங்கம் அவர்களினதும் யாழ்ப்பாணம் நடராஜா (நகைக்கடை அதிபர்) அவர்களினதும் தந்தையாரும் K. திருநாவுக்கரசு (சுகாவத்தை சுகாதார பரிசோதகர்) அவர்களினதும் V. C. பரமநாதன் (பொது நம்பிக்கைப் பொறுப்பாளர்கந்தோர்) அவர்களினதும் A. N. யோகநாதன் (மன்னார் பகிரங்க வேலைப் பகுதி) அவர்களினதும் மாமனாரும் ஆகிய திரு. துரையப்பா கந்தையா அவர்களின் தகனக்கிரியைகள் 26-3-62 திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கோம்பையன்மணல் மயானத்தில் நடைபெறும்.

415, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம்.

# விஸ்கியும், சிகரெட்டும் குறைந்த விலையில் விற்பனை?

## சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்படுவது காரணமாம்

கொழும்பு, ஞாயிறு

ஏராளமான 'விஸ்கி' மதுபானப் போத்தல்களும், சிகரெட்டுகளும் வெளி நாடுகளிலிருந்து இங்கு கொண்டு வரப்பட்டு, மார்க்கெட் விலைக்கு குறைவாக விற்பனை செய்யப்படுவதாக சுங்க இலாகா அதிகாரிகளுக்கும் பொலிஸாருக்கும் தகவல் கிடைத்திருக்கிறது.

இங்கிருந்து வெளியில் செல்லும் படகுகளையும், வெளிநாடுகளிலிருந்து இங்குவருபவைகளையும் கண்டுபிடிப்பதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

மதுபானமும், சிகரெட்டுகளும் மார்க்கெட் விலைக்கு குறைவாக விற்பனை செய்யப்படுகின்றன. ஸ்கொச் விஸ்கி ஒரு போத்தல் ரூ. 30 வீதம் விற்பனை செய்யப்படுகிறது. சந்தேகிக்கப்படும் சில கப்பல்களும் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

இதுபற்றி சுங்க இலாகா அதிகாரி வொருவர் தெரிவிக்கையில், சட்ட விரோதமாக்க கடத்தப்பட்டு வரும் இப்பொருட்கள், முன்னர் ஹெந்தலைக்கு அருகிலுள்ள கடற்கரை யோரத்தில் இறக்குமதி செய்யப்பட்டதென்றும் இப்பொழுது, மட்டக்குளியிலிலுள்ள படகுத் துறையில் இறக்குமதி செய்யப்படுகின்றன என்றும் கூறினார்.

## சரியாகப் பதிவாகாத வழக்கில் எதிரிகள் விடுதலை

கொழும்பு, ஞாயிறு

காவலையிலுள்ள ஒரு பெற்ரோல் நிலையத்திலிருந்து நான்கு மோட்டார் கார் டியூப்புகளைக் களவாடியதாக, இரு இளைஞர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டுத் தொடரப்பட்ட வழக்கு மாஜிஸ்திரேட் திரு. எம். ஏ. ஹுசைன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

எதிரிகள் சார்பில் ஆஜரான வழக்கறிஞர், இவ்வழக்கு சரியான முறையில் பதிவாகவில்லையென்றும், முதல் எதிரி பெற்ரோல் நிலையத்தில் 'பம்ப்' உதவியாளர் என்றும் தவறான அபிப்பிராயத்துடன் வழக்கு பதிவாகியிருப்பதாகவும் கூறினார்.

மாஜிஸ்திரேட்: இரண்டாம் எதிரி எப்படி இதில் சம்பந்தப்பட்டார்?

எதிரி வழக்கறிஞர்: இரண்டாம் எதிரி, குற்றம் எதுவுமே செய்யாதவர். பெற்ரோல் நிலையத்தில் காவல் செய்பவர்.

மாஜிஸ்திரேட் (உரிமையாளர் பியதாசாவைப் பார்த்து): இவர்கள் இருவரையும், சேவையிலிருந்தும் விலக்கிவிட்டீரா?

பியதாசா: இல்லை.

மாஜிஸ்திரேட்: அப்படியானால் இவர்கள் இன்னும் உமது ஊழியர்கள்?

பியதாசா: ஆம். நான் பொலிசாருக்கு முறையிட்ட பின்னர் இவர்கள் இருவரும் வேலைக்கு வரவில்லை.

மாஜிஸ்திரேட்: எதிரிகளை எச்சரித்து விடுதலை செய்கின்றேன்.

## போட்டி நடைபெறமாட்டாது

கொழும்பு, ஞாயிறு

கொழும்பு சென்ஜோசெஸ் கல்லூரிக்கும் செல். பெனடிக்ஸ்கல்லூரிக்குமிடையே இம்மாதம் 30-ம் 31-ம் திகதிகளில் நடைபெறவிருந்த கிரிக்கெட் போட்டி, ரத்து செய்யப்பட்டுள்ளது. விடுமுறை காரணமாக இரு பாடசாலைகளும் மூடப்பட்டுள்ளன.

## உங்கள் தினப்பலன்

-சோதிட ஆசான் செ. தெல்லியூர்-

பிலவ ஆண்டு பங்குனிமாதம் 13-ந் திகதி திங்கட்கிழமை (26-3-62) இரவு 7-07 வரை பஞ்சமி, பின் ஷஷ்டி, பின் இரவு 3-16 வரை அனுஷம், பின்னர் கேட்டை. பகல் சித்த யோகம், இரவு மரணயோகம். பகல் சுபகருமங்களுக்கு உகந்தது. இரவு தெய்வ வழிபாட்டில் காலம் கழிக்குக.

### இன்று பிறந்தவர்களுக்கு

இவர்களுக்கு வீண்பீதி, உடல்நலக்கேடு, பணமுடை, உறவினர் கரைச்சல், ஏமாற்றம் ஆதியன முற்பகுதியில் காணப்படும். இக்காலத்தில் தெய்வவழிபாடு நலம். பின் பகுதியில் பணவரவு, தொழில் வெற்றி, உழைப்புக்கு வருவாய், நிரந்தர தொழில், சகோதரர்நலம், வர்த்தக லாபம், பெண்களுக்குச்சிறப்பு, பொருள்வரவு ஆதியன காணப்படுகின்றன.

### நட்சத்திரப் பலன்

அச்சுவினி: தொழிற்பேறு, பணவரவு.
பரணி: தொழிற்கேடு, ஏமாற்றம்.
கார்த்திகை: பிரயாண நன்மை, மாதாவழிதொடர்பு.
ரோகிணி: பெரியார் நட்பு, யாத்திரை முயற்சி.
மிருகசீரிடம்: தருமவழிச் செலவு, பணவரவு.
திருவாதிரை: பிரயாணசுகம், பிதுருசிந்தை.
புனர்பூசம்: பதவியுயர்ச்சி, பணவரவு.
பூசம்: ஊழியர் தொல்லை, பிதாவழி நிறை.
ஆயிலியம்: பணவரவு, வைராக்கியசிந்தை.
மகம்: நல்லோர்நட்பு, மதிப்புயர்ச்சி.
பூரம்: ஏமாற்றம், உடல் நலக்கேடு.
உத்தரம்: பொருள்வரவு, ஊழியர்உதவி.
அத்தம்: பொருள்சேர்க்கை, யாத்திரைசிந்தை.
சித்திரை: மகிழ்ச்சி, பணவரவு.
சுவாதி: செய்காரியக்கேடு, நீசர்தொடர்பு.
விசாகம்: உறவினர் தொடர்பு, பணவரவு.
அனுஷம்: பணமுடை, முதியோர்நட்பு.
கேட்டை: ஊழியர்உதவி, தேகநலக்குறைவு.
மூலம்: நற்கரும வெற்றி, கலையாராய்ச்சி.
பூராடம்: பணச்செலவு, ஏமாற்றம்.
உத்தராடம்: தெய்வஉதவி, தருமவழிச்செலவு.
திருவோணம்: தருமச் செலவு, யாத்திரைமுயற்சி.
அவிட்டம்: தேகநலம், பணவரவு.
சதயம்: நீசர்தொடர்பு, கவலை.
பூரட்டாதி: பதவிச்சிறப்பு விவாகமுயற்சி.
உத்தரட்டாதி: அன்பர் தொல்லை, தெய்வவழிபாடு.
ரேவதி: தொழில் இலாபம், பகைநீக்கம்.

## 2,50,00,000 ராத்தல் புகையிலை

புதுடில்லி, மார்ச் 25

இவ்வாண்டு இந்தியாவிலிருந்து 2,50,00,000 ராத்தல் புகையிலையை வாங்க ரஷ்யா முன்வந்துள்ளது.


மாமைட்: பலமும் சுகமும் தருகிறதால் நானும் என்கணவரும், என்பிள்ளைகளும் மாமைட் அருந்துகிறோம் — இதைக் கவனிப்பது என் கடமையாகும்.



இவர்கள் யாவரும் நன்ருய் சாப்பிடுகிறார்கள். அதிக சக்தியும் பெலனும் உள்ளவர்களாய் இருக்கிறார்கள். பலத்திற்கும் வீர்யத்திற்கும் உங்கள் தினசரி ஆகாரத்தில் ஒரு பாகமாக நீங்கள் மாமைட்டை தினசரி அருந்தி வர வேண்டும்.

மாமைட் வெந்நீரில் அருந்தப் படலாம். உங்களுக்கு விருப்பமானல் கொஞ்சம் எலுமிச்சம் பழச்சாறும் சேர்த்து அல்லது தாளித்துச் சாப்பிடலாம். மாமைட்டை ரொட்டியிலோ அல்லது பிஸ்கட்டிலோ பட்டரோடு அல்லது பட்டரின்றி இலேசாகத் தடவி சாப்பிடலாம். மாமைட்டை சுப் கறி முதலியவற்றில் சேர்க்கும்போழுது அதிகப்படியான ருசியை மட்டுமின்றி உங்கள் தினசரி ஆகாரத்தைச் சமைக்கும் பொழுது தேவையான விட்டமின் பி சத்துக்களையும் கூட்டிக் கொள்கிறீர்கள்.




மாமைட் பி வர்க்க விட்டமின்களை ஏராளமாகக் கொண்ட ஓர் காய்கறி ஆகாரம்

மாமைட்

பாகிஸ்தான்

# டாக்கா மாணவர்மீது தடியடிப்பிரயோகம்

## புதிய அரசியல் அமைப்பை எதிர்த்து தொடர்ந்துஆர்ப்பாட்டம்

டாக்கா, மார்ச் 25

பாகிஸ்தானின் புதிய அரசியலமைப்புச் சட்டத்தை எதிர்த்து நேற்று டாக்காவில் ஆர்ப்பாட்டம் செய்த மாணவர்களமீது தடியடிப் பிரயோகமும், கண்ணீர்ப்புகைக் குண்டு வீச்சும் நடைபெற்றன.

சில தினங்களாகவே மாணவர்கள் கிளர்ச்சி நடத்தி வருகிறார்கள். நேற்று டாக்கா பல்கலைக்கழக மாணவர்கள் ஊர்வலமாகச் சென்று ஆர்ப்பாட்டம் நடத்தியதைத் தொடர்ந்து பொலிசார் தடிகளால் தாக்கியும், கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசியும் ஊர்வலத்தைக் கலைத்தனர். பல மாணவர்கள் கைது செய்யப்பட்டனர்.

அரசியல் கைதிகளை விடுவிக்கவேண்டுமென்றும், ஜனநாயக அரசியல் நாட்டுக்கு வேண்டுமென்றும் மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

ஜனாதிபதி அயூப்கானின் புதிய அரசியல் சட்டப்படி ஏப்ரல் 28ம் தேதி பாகிஸ்தான் பார்லிமெண்டுக்கான தேர்தல்கள் நடைபெறும். மே 6ம் தேதி கிழக்கு பாகிஸ்தான், மேற்கு பாகிஸ்தான் ஆகியவற்றின் மாகாண சபைத் தேர்தல்கள் நடைபெறும். இத்தேர்தல்களில் 80,000 பேருக்குமட்டுமே ஓட்டுரிமை உண்டு.

அல்ஜீரியா

## பயங்கரவாதிகள்மீது தீவிர நடவடிக்கை

### பிரெஞ்சு ராணுவம் மேற்கொண்டுள்ளது

அல்ஜியர்ஸ், மார்ச் 25

அல்ஜீரியாவில் ஐரோப்பிய பயங்கரவாதிகள்மீது பிரெஞ்சு ராணுவம் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது. பயங்கரவாதிகளின் கொட்டத்தை அடக்குமுகமாக அல்ஜீரியாவுக்கு அனுப்பப்பட்ட புதிய ஹைகமிஷனர் நேற்று பாரிசிலிருந்து அல்ஜியர்ஸ் சென்றார்.

பயங்கரவாதிகளை அடக்கும் முயற்சியில் உறுதியுடன் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமாறு ஜெனரல் டிகால் அவருக்கு உத்தரவிட்டிருக்கிறார்.

பிரான்சில் அல்ஜீரியா சம்பந்தமான வாக்களிப்புக்குப் பின், பொதுத் தேர்தல் நடத்தப்படும் என பிரெஞ்சு பிரதமர் திரு. டெப்ரே அறிவித்திருக்கிறார்.

அல்ஜியர்ஸின் சுற்றுப்புறத்தில் பிரெஞ்சு பாதுகாப்புப் படைகள் ஐரோப்பியரின் இல்லங்களைச் சோதனையிட்ட போது இருதரப்பாருக்கும் துப்பாக்கிச் சண்டை நடைபெற்றது. இதனால் 6 பேர் மாண்டனர். 2 பேருக்குக் காயமேற்பட்டது. பயங்கரவாதிகளின் கோட்டையான இப்பகுதியில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது. துருப்புக்கள் இப்பகுதியை வளைத்துக் கொண்டிருக்கின்றன. இந்த நடவடிக்கையின் போது 50 பேர் கைது செய்யப்பட்டனர். பெருமளவான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. ஒரானில்மேலும் 2 வழிப்பறிகள் நடைபெற்றிருக்கின்றன. பயங்கரவாதிகள் முன்பு நடத்திய வங்கிகொள்ளையில் 15 லட்சம் பவுன்களைக் கொள்ளையடித்துச் சென்றனர். சரித்திரத்திலேயே இதுதான் இரண்டாவது பெரிய வங்கிக் கொள்ளை எனக் கூறப்படுகிறது.

## ஸ்ரீ. மேனன் தகவல்

புதுடில்லி, மார்ச் 25

பாதுகாப்பு மந்திரி ஸ்ரீ. கிருஷ்ணமேனன் படைபலக் குறைப்பு மகாநாட்டின் நிலவரம் பற்றி யூனியன் மந்திரி சபைக்குத் தெரிவித்தார்.

ஸ்ரீ. மேனன் மீண்டும் ஜெனீவாவுக்கு எப்போது செல்வார் என்று தெரியவில்லை. அவசியம் ஏற்படின் அவர் ஜெனீவாவுக்குச்செல்லக்கூடும்.

## 11 லட்சம் டன் இரும்புக்கனி உற்பத்தி

புதுடில்லி, மார்ச் 25

சென்ற ஆண்டு 11 லட்சம் மெட்ரிக்டனி இரும்புக்கனியை இந்தியா உற்பத்தி செய்ததென்றும், இவற்றில் 2 லட்சம் டன் ஏற்றுமதி செய்யப்பட்டதென்றும் அறிவிக்கப்படுகின்றனர்.

## சாம்ராஜ்ய வானவெளி பேச்சுவார்த்தையில் இலங்கை

லண்டன், மார்ச் 25

லண்டனில் மார்ச் 28-ம் திகதி முதல் ஏப்ரல் 13-ம் திகதி வரை நடைபெற இருக்கும் வானவெளி தொடர்பு பற்றிய சாம்ராஜ்ய மாநாட்டில் 10 தேசங்கள் பங்குபற்றும். அதில் இலங்கையும் ஒன்றாகும்.

பிரிட்டிஷ் பிரதம தபால் காரியாலயத்தின் டைரக்டர் ஜெனரல் ஸேர்ஜெனல்ட் ஜெர்மனியின் தலைமையில் கீழ் நிபுணர்கள் வானவெளி பற்றி பிரிட்டனையும் சாம்ராஜ்ய தேசங்களையும் இணைக்கும் திட்டத்தை விவாதிப்பர். இலங்கைப் பிரதிநிதியாக திரு. எச். ஈ. செனிவரட்ன கலந்து கொள்வார். இம் மாநாட்டில் பங்குபெறும் நாடுகள் பின்வருமாறு: அவுஸ்திரேலியா, கனடா, கானு, பாகிஸ்த்தான், நியூஸிலந்து, நைஜீரியா, ரொடேஷியா—நையாஸிலந்து சம்மேளனம் சீராலியோன்.

## அணு ஆயுத தடை கமிட்டி மேலும் விஸ்தரிக்கப்படும்

ஜெனிவா, மார்ச் 25

அணு ஆயுதத் தடை பற்றிய பிரிட்டன், அமெரிக்கா, ரஷ்யா ஆகிய நாடுகளடங்கிய உபகமிட்டி, ஒரு சிலநடுநிலைமை நாடுகளைக்கொண்டு விஸ்தரிக்கப்படும் என அதிகாரபூர்வமான வட்டாரங்கள் தெரிவித்தன. எந்தெந்த நாடுகளைச் சேர்த்துக் கொள்வதென்ற முடிவு விரைவில் வெளியாகலாம்.

## விளையாட்டும் வினையும்

கொழும்பு, ஞாயிறு

கொழும்பு கறுவாக்காட்டில் விளையாட்டுத் துப்பாக்கியால் ஒரு பாடசாலை மாணவன் சுட்டபோது, அடுத்தவீட்டு உப்பரிகையில் பட்டது. ராஜதந்திரத் தூதுவர் ஒருவரது வீடு அது. உடனே அந்த ராஜதந்திரி, பொலிசாரை வரவழைத்துவிட்டார். மேலும், அச்சிறுவனும் அவரது பெற்றோரும் மன்னிப்புக் கேட்க வேண்டும் எனவும் அவர் வற்புறுத்தினார். ஒன்றும் அறியாத சிறுவனின் செய்கை எனக் கூறி மன்னிப்புக் கேட்க பெற்றோர் மறுத்துவிட்டனர். எனினும் பொலிசார் சமரசத்தில் ஈடுபட்டதன் பேரில் அச்சிறுவன், ராஜதந்திரியிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டான்.

## ஷோம்பேயற்றி காங்கோ பிரதமர்

லியப்போல்ட்வில், மார்ச் 25

காடாங்கா அதிபர் ஷோம்பே தம்முடன் முழு அதிகாரத்துடன் பேச்சுவார்த்தை நடத்தச் சம்மதிக்கும் வரை, இப்பேச்சுகளினால் பயனில்லை என காங்கோ பிரதமர் அடுலா கூறியிருக்கிறார். தாம் நடத்தும் பேச்சுவார்த்தைகளின் முடிவை கடாங்கா சட்டசபை ஆதரிக்கவேண்டும். என ஷோம்பே கூறிவருவதே இதற்குக் காரணமாகும்.

## டெஸ்ட் கிரிக்கெட்

பார்படோஸ், மார்ச் 25

இந்தியாவுக்கும் மேற்கிந்தியத் தீவுகளுக்குமிடையே நடைபெறும் 3-வது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியின் 2-ம் நாளான நேற்று, மேற்கிந்தியக் கோஷ்டி 4 விக்கட் நஷ்டத்திற்கு 263 ரன்கள் எடுத்தது. இந்தியா முதல் இன்னிங்ஸில் 258 ரன்கள் எடுத்தது.

லண்டன், மார்ச் 25

அணுசோதனையை மீண்டும் ஆரம்பிப்பதென்ற முடிவை எதிர்த்து லண்டனில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் 1100 பேருக்குமேல் கைது செய்யப்பட்டனர்.

## "தடுப்புக்காவல் எச்சந்தர்ப்பத்தில் இருக்கவேண்டும்?"

### சர் லெஸ்லிமன்ரோ கருத்து

கோலாலம்பூர், மார்ச் 25

ஐ.நா. நிறுவனத்திற்கு குறிப்பாக அமெரிக்கா, இந்தியா, மலாயா போன்ற நாடுகள் சந்தாச் செலுத்தாது போயிருந்தால் ஐ. நா.வைக் கலைக்க நேர்ந்திருக்கும் என்று அனைத்துலக வழக்கறிஞர் குழுவின் பொதுக் காரியதரிசி சர் லெஸ்லி மன்ரோ இங்கு கூறினார்.

சிலாங்கூர் சட்டமன்ற அரங்கில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய ஐ. நா. பொதுச் சபையின் முன்னாள் தலைவருமாகிய சர் லெஸ்லி, காங்கோவில் அமைதியையும், ஒழுங்கையும் நிலைநாட்ட பாடுபட்டுவரும் ஐ. நா. தளபத்தியத்திற்கு ஆதரவு நல்கி வரும் மலாயாவை வெகுவாகப் பாராட்டினார்.

மலாயாவுக்கு ஐந்து நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்ட சர் லெஸ்லி மேலும் பேசுகையில் முன்பு நிறுவப்பட்ட சர்வதேசக் கழகத்திற்கும் இப்போதைய ஐ. நா. அமைப்புக்கும் அதிக வேறுபாடுகள் உள்ளன எனவும், ஐ. நா. பொதுக் காரியதரிசி அதிக அதிகாரங்களைப் பெற்றுள்ளார் எனவும் தெரிவித்தார்.

உள்ளூர் வழக்கறிஞரும் மலாயன் இந்தியக் காங்கிரஸின் ஸ்தாபக உறுப்பினருமான திரு. கே. எஸ். தேவாசர் கேட்ட கேள்விக்குப் பதில் அளிக்கையில் சர் லெஸ்லி சொன்னார்:

சமாதான காலத்தில், அவசரகாலமோ அல்லது ஆபத்தோ மிரட்டலோ இல்லாத தருணத்தில் போதிய சட்டப் பாதுகாப்பின்றி தடுப்புக் காவல் சட்டத்தை எந்த நாடும் பெற்றிருக்கக்கூடாது.

'என்னுடைய சொந்த நாடான நியூஸிலந்திலும், ஆஸ்திரேலியாவிலும் கடுமையான கலகங்கள் ஏற்பட்டபோது அவசரக்காலச் சட்டங்கள் இருந்தன' என்றார்.

இது குறித்து மற்றொரு உள்ளூர் வழக்கறிஞரும், சர்வதேச வழக்கறிஞர் குழுவின் கோலாலம்பூர் பிரிவுத் தலைவருமான திரு. ரமணி பேசுகையில், பொது மக்களின் பாதுகாப்புக்காக தடுப்புக் காவல் சட்டத்தைப் பயன்படுத்துவது கைது நடவடிக்கையின் முக்கிய நோக்கமாகும் என்பதை நினைவில் கொள்ளவேண்டும் என்று கூறினர்.

ஐ. நா. நிறுவனத்துடன் நீண்ட காலமாகத் தொடர்பு கொண்டுள்ளதை விவரித்துப் பேசிய சர் லெஸ்லி, உலகின் பொது அபிப்பிராயத்தைப் பெரும்பாலும் உதாசீனம் செய்வது சோவியத் ரஷ்யாவே என்றார்.

சர் லெஸ்லி தமது உரையில் மேலும் சொன்னார்:-

போர்ச்சுக்கீசிய அங்கோலாவில் அமுலில் உள்ள பலவந்த வேலை முறைகள் குறித்து விசாரிக்க ஐ. நா. ஆய்வுக் குழு ஒன்று முயன்றது. ஆனால் சர்வதேச தொழிலாளர் நிறுவனத்திற்கு மட்டுந்தான் அனுமதிக்கப்பட்டது.

அல்ஜீரியா மிகவும் பரிதாபகரமான ஸ்தலமாக இருக்கிறது. மேலும் ஐ. நா. வின் திறனுக்குச் சவாலாகவும் அமைந்திருக்கிறது.

ஐ. நா. விலுள்ள மலாயா பிரதிநிதிகளுடன் அதிகத் தொடர்புகொண்டு வந்திருக்கிறேன். அமெரிக்காவின் தூதராகவும், ஐ. நா.வுக்கான மலாயா பிரதிநிதிகள் குழுவின் தலைவராகவுமிருந்த டாக்டர் இஸ்மாயில் தான் நினைவில் இருக்கிறார்.

ஹங்கேரி, திபேத் ஆகியவை குறித்து ஆண்டுதோறும் அறிக்கைகளையும், தீர்மானங்களையும் தயாரிக்கிறோம்.

உலகின் ஒரு பகுதிக்கு இழைக்கப்படும் அநீதியை இதர பகுதிகளுக்கும் இழைக்கப்படும் அநீதியாகவே கருதவேண்டும். தவறினால் நீதியை நிலைநாட்ட முடியாது என்றார்.

சிறிய நாடுகளின் குரலை ஐ. நா. பிரதிபலிப்பதாகவும் அவர் கூறினார்.

பொதுக்கூட்டத்தில் பேசிய திரு. ரமணி, அமெரிக்காவிலுள்ள பல பல்கலைக் கழகங்கள் சர் லெஸ்லிக்கு கௌரவ டாக்டர் பட்டங்களை வழங்கி இருப்பதாகத் தெரிவித்தார்.

சர் லெஸ்லி சிறந்த வழக்கறிஞர், சிறந்த பத்திரிகையாளர், சர்வதேசரீதியிலான அரசியல்வாதி. அவர் 15 ஆண்டுகள் வழக்கறிஞராகப் பணிபுரிந்த பின் பல சட்ட ஏடுகளைத் தொகுக்கும் பணியில் ஈடுபட்டார். நியூஸிலாந்து ஹெரால்டுக்கும் அவர் ஆசிரியராகப் பணியாற்றினர் என்றார்.

## நாகா கலகக்காரர்கள் மீண்டும் தாக்குதல்

### 191 வீடுகள் சாம்பலாயின

ஷில்லாங், மார்ச் 25

வடசாச்சார் மலைகளில் ஆறு கிராமங்களில் நாகா கலகக்காரர்கள் நடத்திய தாக்குதலில் 191 வீடுகள் அடியோடு எரிந்து சாம்பலாயின. நூற்றுக் கணக்கான கால்நடைகள் பலியாயின. சுமார் ஆயிரம் ஜனங்கள் வீடுகளை இழந்து தவிக்கிறார்கள். இதுவரை நடந்திராத பெரிய அளவில் நாகாக்கள் நடத்திய தாக்குதலுக்கு அசட்டையே காரணம் எனக் கூறப்படுகிறது.

இந்த கிராமங்களை நாகா கலகக்காரர்கள் தாக்க முடிவு செய்துள்ளனர் என்று நான்கு தினங்களுக்கு முன்னரே தகவல் கிடைத்திருக்கிறது. அப்படி இருந்தும் தாக்குதல் நடந்திருப்பதால் அதிகாரிகள் அசிரத்தையாக இருந்துவிட்டனர் என்ற முடிவுக்கே வரவேண்டியிருக்கிறது.

நாகா கலகக்காரர்கள் தாங்கள் அந்தக் கிராமங்களில் கொள்ளையிடப் போவதாகக் கிராமவாசிகளுக்கு மூன்று நாட்களுக்கு முன் எச்சரிக்கை கொடுத்தார்கள். இந்தக் தகவல் 80 மைல்களுக்கும் அப்பால் உள்ள ஜில்லா தலைமைக் காரியாலயத்துக்குக் கம்பியில்லாத் தந்தி மூலம் தெரிவிக்கப்பட்டது.

தாக்குதல் பற்றிய விவரம் பின்வருமாறு: வட சாச்சார் மலைகள் நாகா பிரதேசம் இவற்றின் எல்லையில் மார்ச் 11-ந் தேதியன்று நாகா கலகக்காரர்கள் நான்கு நபர்களை பிடித்துக் கடத்திக் கொண்டு போயினர். தாங்கள் சொத்துக்களைக் கொள்ளையிட்டுக் கொண்டு போவதற்காக மூன்று தினங்களுக்குப் பின் மீண்டும் வரப்போவதாகவும் நூற்றுக் கணக்கானவர்களுக்கு சாப்பாடு தயாரித்து வைத்திருக்க வேண்டுமென்றும் அக் கலகக்காரர்கள் செல்லிவிட்டுப் போனார்கள்.

கடத்திச் செல்லப்பட்ட நான்கு நபர்கள் என்னவானார்கள் என்று தெரியவில்லை.

15-ம் தேதியன்று சுமார் நூறு கலகக்காரர்கள் வந்தனர். அவர்கள் பல கோஷ்டிகளாகப் பிரிந்து வந்தனர். ஒரு கோஷ்டியினரிடம் ரைபிள்கள், சுழல்துப்பாக்கிகள் இருந்தன.

ஒரு கிராமத்திற்கு வந்து அவர்கள் ஒரு கிராமவாசியிடம் ஆயிரம் ரூபாய் பணம் கேட்டனர். அவர் 100 ரூபாய் கொடுக்கத் தயாராக இருந்தார். ஆத்திரமடைந்த கலகக்காரர்கள் அவருடைய வீட்டுக்கும் பின்னர் மற்ற வீடுகளுக்கும் தீ வைத்தனர். ஜனங்களும் கூக்குரலிட்டனர். கால்நடைகளின் கதறலுக்கிடையே வீடுகள் சாம்பராயின. இதே மாதிரி மற்ற கிராமங்களிலும் வீடுகளுக்குத் தீ வைக்கப்பட்டது.

ஒரு கிராமவாசி சுட்டுக் கொல்லப்பட்டார். மற்றும் பலர் காயமடைந்தனர்.

சொத்து நஷ்டம் பல லட்ச ரூபாய்கள் இருக்குமென்று மதிப்பிடப்படுகிறது.

புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட காங்கிரஸ் எம். எல். ஏ. ஒருவர் நிலைமையை முதல் மந்திரியிடம் எடுத்துக் கூறினார்.

சம்பவம் நடந்த இடத்துக்கு இரண்டு பொலிஸ் பட்டாளங்கள் போய்ச் சேர்ந்துள்ளன

### மணி வாக்கு

"வெற்றியும் தோல்வியும் பாராமல்; புகழும் வசையும் எண்ணாமல் கடமையைச் செய்து மகிழ்வது தான் இவ்வுலகில் உண்மையான மகிழ்ச்சியாகும்."

ஈழநாடு
EELA NADU

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone 389

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு பங்குனி மீ 13 உ (26-3-62)

### அநாகரகம்

**ப**ழைய காலத்துக் கல்வி முறைகள் புறக்கணிக்கப்பட்டுக் குழந்தைகளின் வயதுக்கும் அவர்களின் உள்ளப்பாங்குக்கும் ஏற்பக் கல்வியூட்ட வேண்டுமென்ற கொள்கையே இப்போது உலகெங்கணும் கடைப்பிடிக்கப் பெற்றுவருகின்றது. பிள்ளைகளுக்குத் தண்டனை விதியாது அன்பும், ஆதரவும் காட்டி அவர்களுக்குப் படிப்பில் ஆர்வம் ஊட்ட வேண்டுமென்பதே இக்காலக் கல்வி நிபுணர்களின் கருத்தாகும்.

'அடியாத நாடு படியாது' என்ற கருத்து இந்நாட்களில் மதிப்பிழந்துவிட்டது. முன்னரெல்லாம் மாணவர்களை ஆசிரியர்கள் இரக்கமின்றித் தண்டித்துவந்தனர். நெற்றியிற் கல் வைத்து ஆகாயத்தைப் பார்க்குமாறு வெயிலில் நிறுத்தினர். வகுப்பில் ஒற்றைக் காலில் நிற்குமாறு பணித்தனர். இப்படி மிருகத்தனமான முறையில் மாணவர்களுக்குத் தண்டனைகள் விதிக்கப்பட்டன.

இன்று இத்தகைய செயல் அநாகரிகமெனக் கருதப்படுவதுடன் இளம் உள்ளங்களின் எதிர்காலத்துக்கு இவை பங்கம் விளைக்கின்றதெனவும் கருதப்படுகின்றது. இந்நிலையில் கொழும்பிலுள்ள ஒரு பெண்கள் பள்ளிக்கூடத்தில் மாணவி ஒருவர் தண்டிக்கப்பட்ட முறை பயங்கரத்தையே விளைக்கின்றது. கறையான் புற்றில் அக்குழந்தையை இருக்குமாறு பணித்த அந்த ஆசிரியையின் செயலை கல்வி உலகம் வன்மையாகக் கண்டிக்கும். தாய்மை விளங்கவேண்டிய இடத்தில் இக்கொடுமையா? குழந்தைகளின் மனநிலையை உணர்ந்து அவர்களுக்குக் கல்வியூட்டுவதற்காகவே ஆசிரியர்களுக்கு ஆசிரிய கலாசாலைகளில் பயிற்சி அளிக்கப்படுகின்றது. உயர்ந்த பட்டங்களை ஒருவர் பெற்றிருந்தாலும் அவருக்குப் பிள்ளைகளின் மனநிலையை உணர முடியாதாயின் அவர் சிறந்த ஆசிரியராக விளங்க முடியாது. விடுமுறைக் கழகங்களை ஏற்படுத்தி ஆசிரியர்களுக்கு விசேஷ பயிற்சி அளிப்பதன்மூலம் இந்தக் குறைபாடுகளை நீக்கிவிடலாம்.

பிள்ளைக் கனியமுதெனவும், பேசும் பொற்சித்திரமெனவும் குழந்தைகளைப் புலவர்கள் வர்ணிப்பதுண்டு. இத்தகைய செல்வக் குழந்தைகள் சில ஆசிரியர்களின் அறியாமையினால் தண்டனைக்குள்ளாவதை எவரும் விரும்பமாட்டார்கள். தவிர ஆசிரியத் தொழிலையே இது அவமானப்படுத்துவதுமாகும்.

கல்வி அபிவிருத்தியில் மிகுந்த அக்கறை காட்டிவரும் இலங்கை அரசாங்கம் ஆசிரியத் தொழிலுக்குத் தகுந்த ஆசிரியர்களையே நியமிக்க வேண்டும். அத்துடன் பள்ளிக்கூட வாழ்க்கை குழந்தைகளுக்குக் கசப்பையூட்டாதிருக்கும் வகையில் ஆசிரியர்கள் பிள்ளைகளுடன் பழகிக்கொள்ளவேண்டும். பள்ளிக்கூடமென்றால் அது நடமாடும் தெய்வங்கள் உறையும் கோயில் என்ற எண்ணம் ஆசிரியர்களிடம் ஏற்படுமாயின் எவ்வித கொடுஞ் செயல்களும் அங்கு இடம்பெற மாட்டாதெனலாம்.

# வெளிநாடுகளுக்கு உதவி

## அமெரிக்க நிலையத்தின் புதிய அம்சங்கள்

**யு**. எஸ். உதவி என்பது சர்வதேச வளர்ச்சிக்கான அமெரிக்க அரசாங்கத்தின் நிலையம் வெளிநாடுகளுக்கு அமெரிக்க உதவி நிர்வாகத்தை இந்தப் புதிய நிலையம் மேற்கொண்டது. அது மட்டுமல்ல உதவித் திட்டத்திற்குப் புதுக்கொள்கைகளும் நெறிமுறைகளும் ஏற்றுக் கொள்ளப்பட்டன. வெளிநாடுகளில் இந்த நிலையம் நிர்வகித்துவரும் 75 உதவிக் குழு அலுவல்கள் அனைத்திலிருந்தும இப்புதுக் கொள்கைகளின் பேரில் தயாரிக்கப்பட்ட அறிக்கைகள், இப்பொழுது பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றன. 1963 நிதி ஆண்டில் அமுலுக்கு வரவேண்டிய திட்டங்களைப் பற்றியே முக்கியமாக இருக்கின்றன இந்த அறிக்கைகள்.

### இரு புது அம்சங்கள்

அமெரிக்க உதவித் திட்டத்தில் குறிப்பாக இருஅம்சங்கள் புதியவை என்று கூறலாம். உதவிபெறும் நாடுகளின் சுய உதவிமுயற்சிகளைப் பலப்படுத்திக் கொள்வதற்கே இந்த உதவியை அந்த நாடுகள் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். இது இந்தத் திட்டத்தை ஏற்படுத்திய சட்டத்தில் எழுதப்பெற்றுள்ளது. இரண்டாவது அம்சம் நீண்டகால திட்டம் வற்புறுத்தப்பட்டிருப்பதாகும்.

அமெரிக்க உதவி பெறும் நாடுகளுக்கு அபிவிருத்தித்திட்டங்கள் இருக்கவேண்டும். அந்தந்த நாடுகளின் ஆற்றல்களைப் பற்றி சமூக, பொருளாதார ஆராய்ச்சிகளின் பேரிலும், அபிவிருத்தி முயற்சியைத் தொடர்ந்து நடத்த அந்தந்த நாடுகளின் விருப்பத்தின் பேரிலும் இந்த வளர்ச்சித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும்

இன்னொரு முக்கிய அம்சம் உதவிபெறும் நாடுகளுக்குள் சமூக முன்னேற்றம் வலியுறுத்தப்படுவதாகும். அந்த நாடுகளின் மக்களுக்குக் கல்வியும் பயிற்சியும் அளிக்கப்படவேண்டும். கல்வி பெறுவோரின் தொகையும் அதிகரித்துவர வேண்டும். அவர்களுடைய ஆரோக்கியமும் வாழ்க்கை நிலைமைகளும் அபிவிருத்தியடைய வேண்டும். நாட்டுப் பொருளாதாரத்தில் அவர்களும் பங்கு பெறக்கூடியவர்களாக இருக்கவேண்டும். வரிப் பழுவையும், முன்னேற்றத்தின் பலனையும் சமமாக அனுபவிக்க வேண்டும் பொதுமக்கள் சம்பந்தமான முடிவுகளில் அவர்கள் பங்குபெற வேண்டும். இந்த உரிமைகள் அனைத்தும் அந்தந்த நாட்டிற்குள்ளேயே ஏற்படவேண்டும்.

### வளர்ச்சிக் கடன் நிதி

மேற்கூறிய திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர, உதவி வழங்கக் கூடிய முக்கிய நிறுவனம் வளர்ச்சிக் கடன் நிதிதான். நீண்ட காலத்திட்டங்களுக்கு உதவிசெய்ய இந்த நிறுவனம் கோரப்படும். கடன்கள் பெறுவதற்கு சில நிபந்தனைகள், உண்டு. அதாவது திட்டங்கள் செம்மையாக இருப்பது போன்றவை. பணஉதவி செய்யும் நிறுவனம் என்ற நிலையில் இத் திட்டங்கள் வெற்றிபெறும் என்று நியாயமான நம்பிக்கை ஏற்படவேண்டும். அத்துடன் நாடு ஏற்க விரும்பும் சுயஉதவி முயற்சிகளும் தெரியவேண்டும். இந்த நிறுவனம் வழங்கும் கடன்களை யு. எஸ். டாலரில் திருப்பிக் கொடுக்க வேண்டும். 50 ஆண்டுகள்வரை காலத்தவணைகளில் திருப்பிக்கொடுக்கலாம்.

வளர்ச்சி மானியங்களுக்கும், இதே மாதிரி நிபந்தனைகள் உண்டு. பொருளாதாரவளர்ச்சிக்கு அஸ்திவாரம் போடுவதாகக் கருதப்படும் உதவித் திட்டங்களுக்கு இந்த மான்யங்களைப் பயன்படுத்திக்கொள்ளலாம். கல்வி, சமூகஸ்தாபனங்கள் வளர்ச்சி, தேசிய வளங்கள் ஆராய்ச்சி போன்ற அடிப்படை அம்சங்கள் உட்பட்டுள்ளன.

அமெரிக்காவின் தேசிய பந்தோபஸ்தும், வெளிநாட்டுக் கொள்கை இலட்சியங்களும் சம்பந்தப்பட்டுள்ள குறிப்பிட்ட சில நாடுகளுக்கு பொருளாதார உதவியும் தொடர்ந்து இருக்கவேண்டியதே. "ஆதரவு உதவி" என்று கூறப்படும் இந்த உதவி பொருளாதார, அரசியல் உறுதி நிலையை வளர்க்கப் பயன்படுத்தவேண்டும்.

இதனால், சம்பந்தப்பட்ட நாடுகள் பொது பாதுகாப்புக்கு அதிக அளவில் உதவி செய்யமுடியும். மேலே கூறப்பட்ட "ஆதரவு உதவி" இல்லாவிடில் இந்த நாடுகளுக்குப் பொதுபாதுகாப்புக்கு உதவி செய்ய சக்தி இருக்காது. ஆனால் இந்தத் திட்டங்கள் நீண்டகாலவளர்ச்சித் திட்டங்களை ஊக்குவிக்கும் முயற்சி வெற்றியடைகையில் படிப்படியாக குறைந்துவரும்.

உதவித் திட்டத்தின் இன்னும் பல அம்சங்களில் அமைதிப் பணிக்கு உணவுக்கொள்கையும், அமைதிப் படையும், உதவிவழங்கப்படும் நாடுகளில் ஆராய்ச்சி அபிவிருத்தியும் உட்பட்டுள்ளன.

யு. எஸ். உதவி நிலையத்தை உண்டுபண்ணிய சட்டம், தனியார் துறையில் முயற்சி, போட்டி, கூட்டுறவு ஸ்தாபனங்கள், கடன் வழங்கும் நிலையங்கள், சேமிப்பு கடன்சங்கங்கள், சுதந்திர தொழிலாளர் சங்கங்களைப் பலப்படுத்தும் நடவடிக்கைகள் முதலியவற்றிற்கு, ஊக்கமூட்டுவதையும் விரும்புகிறது. யு. எஸ். உதவி வெகு துரிதமாகப் பணிபுரிய முற்பட்டிருப்பதால், உலகின் தற்காலத் தேவைகளை நிறைவு செய்வது சாத்தியமாக இருக்கும்.

### அல்ஜீரியா

அல்ஜீரியாவில் சென்ற வாரம் போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டபோது அதனைச் சமாதானப் பிரியர்கள் அனைவரும் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். வட ஆபிரிக்காவில் பிரான்ஸ் நாட்டின் குடியேற்ற நாடாகிய அல்ஜீரியாவில் சென்ற ஏழு வருடங்களாக நடைபெற்ற இந்த ஆயுதப் போராட்டத்தில் ஏராளமான பேர் இறந்தனர். அந்நாட்டில் மக்கள் அடைந்த இன்னல்களோ அதிகம். ஆகவேதான், போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டதற்காக பிரான்ஸ் தலைவர்களையும் அல்ஜீரியா தலைவர்களையும் உலகமே பாராட்டியது. உடன்பாடு எப்போதும் நல்லதே யென இந்தியப் பிரதமர் நேருஜி கூறியது மன்றி அல்ஜீரியா விரைவில் சுதந்திரமடைவது இந்தியாவுக்கு மகிழ்ச்சி தரக்கூடிய செய்தியெனவும் அவர் தெரிவித்திருந்தார். இந்த உடன்பாடு வெற்றிகரமாக நடைபெற வேண்டுமென சமாதானப்பிரியர்கள்எதிர்பார்த்துக் கொண்டிருக்கையில் ஐரோப்பிய பயங்கரவாதிகள் பிரெஞ்சு துருப்புகளுடன் மோதிப் புதிய போரில் இறங்கியிருக்கின்றனர். இவர்களிடையே மூண்ட சண்டை பின்னர் வெளியிடங்களிலும் பரவிற்று. இக் கலகத்தை இரக்கமின்றி அடக்கி ஒடுக்க வேண்டுமென ஜனாதிபதி டி'கால் தெரிவித்துள்ளார்.

இரகசிய இராணுவத்தினரின் இந்த அக்கிரமச் செயலை மனிதாபிமான எவரும் ஏற்க மாட்டார்கள். அல்ஜீரியர்கள் அரிதிற்பெற்ற நன்மைகளை இழக்கச் செய்வதே இரகசிய இராணுவத்தினரின் நோக்கமாக இருக்கின்றது. அல்ஜீரியாவுக்குச் சுதந்திரம் அளிப்பதை விரும்பாத குடியேற்றக்காரர்கள் பலாத்காரத்தில் இறங்குவார்களென ஆரம்பத்தில் எதிர்பார்க்கப்பட்டது. இப்போது அது உண்மையாகி விட்டது எனினும் இந்தப் பாரைத் தொடர்ந்து நீடிக்க விடக் கூடாது.

# வாசபர்மீட் இல்லாதவர்கள் சொத்துக்கள் விற்கும் பணம்

## வெளியே அனுப்ப கட்டுப்பாடு

கொழும்பு, ஞாயிறு

இலங்கையில் வசிப்பதற்கான வாசபர்மிட் இல்லாதவர்கள் தங்கள் சொத்துக்களை விற்பதினால் கிடைக்கும் பணத்தை வெளியே அனுப்புவதற்கு இலங்கை அரசாங்கம் கட்டுப்பாடுகள் விதித்துள்ளது. மூலதனங்கள் வெளிநாடுகளுக்குப் போகாமல் தடுப்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கை இது.

இனிமேல் வாசபர்மிட் இல்லாதவர்கள் தங்கள் உடமைகளை விற்பனை செய்வதற்கு முன் இலங்கை செலாவணி கட்டுப்பாடு அதிகாரிகளிடம் அனுமதி பெறவேண்டும்.

1949லிருந்து 1960 வரை 11 ஆண்டுகளில் இலங்கையிலிருந்து ரூ. 40 கோடி 40 லட்சம் மூலதனம் வெளியே போயிருக்கிறது. வெளியேயிருந்து ரூபா 5 கோடி 80 லட்சம்தான் இலங்கைக்கு வந்திருக்கிறது.

இலங்கையில் அந்நிய செலாவணி இருப்பதால் நாடற்றவர்கள் வெளியேறிச் செல்லுகிறவர்கள் முதலில் இவ்வளவு தொகைதான் எடுத்துச் செல்லலாமென்று வரம்பு கட்டும் சாத்தியம் இருப்பதாகக் கூறப்படுகிறது.

### குருநாகலில் மூவருக்கு வாதநோய்

குருநாகல், ஞாயிறு

இளம்பிள்ளைவாத நோயினால் பீடிக்கப்பட்ட மூவர், குருநாகல் ஜெனரல் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பொல்காவலை, மெல்சிறிபுரா, மல்லாவப்பிட்டியா ஆகிய இடங்களைச் சேர்ந்த இம்மூவரில், இருவரின் நிலைமை மோசமாயிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இது சம்பந்தமாக குருநாகல் மாவட்ட சுகாதார அதிகாரி டாக்டர் சி. எச். முனசிங்கா தெரிவிக்கையில், கையிருப்பில் வாதநோய் தடுப்பு மருந்து இல்லையென்றும் குறைந்த அளவிலாவது தடுப்பு மருந்து அனுப்பும்படி, கொழும்புக்கு அவசர வேண்டுகோள் விடுக்கப்பட்டிருப்பதாகவும் கூறினர்.

---

ஓரான், மார்ச் 25

ஓரான் நகரில், "லெகோடி ஓரான்" என்ற பத்திரிகையின் காரியாலயத்தை ரகசிய ராணுவ ஸ்தாபனத்தினர் கைப்பற்றினர்.

# காவிரிப்பூம் பட்டினத்தில்

## புதிய கண்டுபிடிப்பு

சிதம்பரம், மார்ச் 25

செந்தமிழ் நாட்டில் ஐம்பெரும் காப்பியங்களுக்கு சிறப்பிடமாக விளங்கும் காவிரிப்பூம் பட்டினத்தில் பழமையை இலக்கியம் கற்றோர் நன்குணர்வர். காவிரியின் கடைமுகத்தில் சீரும் சிறப்பும் பெற்று விளங்கிய மிகப் பழமையான நகரமாகும். காவிரிப்பூம்பட்டினம் சோழர்களுடைய தலைநகரமாகவும் விளங்கியது. உலகநாடுகளுக்கெல்லாம் காவிரிப்பூம் பட்டினத்தின் துறைமுகம் மூலப் பொருள்களை வழங்கும் பண்டகசாலையாகவும் விளங்கியது. மேலும் ஆதியில் யவனநாட்டுக் கப்பல்கள் காவிரி நாட்டு கடற்கரையில் பொருள் பெறக் காத்துக் கொண்டிருந்த நகரமாகவும் விளங்கியது.

### புதைபொருள் ஆய்வு

இந்தியத் தொல்பொருள் ஆராய்ச்சி இலாகாவின் தென் வட்டம் குழுவினர் சென்ற 7-ம் தேதி முதல் 16-ம் தேதிவரை 10 நாட்கள் காவிரிப்பூம்பட்டினப் பகுதியிலுள்ள பல சிற்றூர்களுக்குச் சென்று பல இடங்களில் ஆராய்ச்சிகள் நடத்தினர். இக்குழுவினர்களுக்கு மேலப் பெரும் பள்ளம் மாதவிமன்றம் செயலாளரும் இப்பகுதிகளில் புதைபொருள் ஆராய்ச்சி செய்ய வேண்டுமென்று பல துறைகள் மூலம் வலியுறுத்தல் செய்து வந்தவருமான ஸ்ரீ நா. தியாகராசன், மற்றும் சில அன்பர்களும் உறுதுணையாக இருந்து வந்தனர்.

இந்த ஆராய்ச்சிக் குழுவினர் காவிரிப்பூம் பட்டினம் 5 மைல் சுற்றளவில் ஆராய்ச்சி செய்துள்ள ஊர்களில் இதுவரையில் ஆய்வுகளில் கிடைக்கப்பெறாத சில உண்மைகளை நிறையக் கண்டு பிடித்துள்ளனர். இவ்வளவு காவிரிப்பூம் பட்டினத்தின் பழமையை உணர்த்தப் போதியனவாகும் என்றும் கூறப்படுகின்றது. சதுரவடிவில் உள்ள புலி இலச்சினை இட்ட செம்பு காசுகள், இன்னும் வட்டமான பலவகைப்பட்ட சின்னமுடைய காசுகள்- மஞ்சள்- சிவப்பு - பச்சை - வெள்ளை வண்ணங்களுள்ள பலவகை உருவில் மணிகள்-மிகப் பழங்காலத்தில் பயன்படுத்தப்பட்ட பாத்திரங்களின் சிதைந்த ஓடுகளைக் கண்டுபிடித்துள்ளனர்.

### மிகப்பழங்கால கட்டிடத்தின் அஸ்திவாரம்

கீழையூர், மார்ச் 25

ஆராச்சிக் குழுவினர் சிறப்பாக கீழையூர் கிராம வயலில் ஆய்வு செய்து மிகப் பெரிய சுமார் இரண்டடி நீளமும், ஒன்றேகால் அடி அகலமும், மூன்றங்குல கனமுள்ள செங்கல்லால் கட்டின கட்டிடத்தின் அஸ்திவாரத்தையும் கண்டுபிடித்துள்ளனர்.

மேலும் இப்பகுதிகளிலுள்ள மக்கள், மேற்கொண்டும் ஆய்வு குழுவினர்கள் ஆவன செய்து காவிரிப்பூம் பட்டினத்தின் பழமைக்கு ஒளியூட்டுவார்களென்று ஆர்வத்தோடு எதிர் நோக்குகின்றனர்.

### புத்தூர் கல்லூரி வெற்றி

யாழ்ப்பாணம், ஞாயிறு

வலிகாமம்கிழக்கு பாடசாலைகளுக்கிடையே நடைபெறும் கைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி அமைப்பின்கீழ் புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரிக்கும் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற கைப்பந்தாட்டப் போட்டியில் புத்தூர் கல்லூரி 6-15, 15-13, 5-15 புள்ளிகளைப் பெற்று வெற்றியீட்டியது.

திரு. சுப்பிரமணியம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

# தேசியசேவை திட்டத்தின் அடிப்படை நோக்கம்

## ஆசிரியர், பெற்றோர், மாணவர் உணரவேண்டும்

— திரு. சோமசேகரம்

பருத்தித்துறை, ஞாயிறு

"பாடசாலைகள் யாவும் பங்குபற்றும் தேசிய சேவைத் திட்டத்தின் நோக்கத்தை அறிந்திருப்பது, பெற்றோர், ஆசிரியர், மாணவர் ஆகியோரின் கடமையாகும். இச்சேவை மூலம், மாணவர்கள் பாடசாலைகளுக்கும், பொது நிலையங்களுக்கும் உதவி செய்கிறார்கள்."

வல்வெட்டித்துறை சிதம்பரா கல்லூரியில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் உதவி கல்வி டைரக்டர் திரு. எஸ். யு. சோமசேகரம் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

"பாடசாலையொன்றின் தரம் மாறுவதினால் அப்பாடசாலைக்கோ பெற்றோருக்கோ அல்லது மாணவருக்கோ ஏதும் மாறுதல் ஏற்படாது. தனிப்பட்ட ஒருவரின் கீழ் இருந்து, அரசாங்கத்தின் நிர்வாகத்திற்கும் பின்னர் அங்கிருந்து பொது மக்களுக்கும் மாற்றப்பட்டிருக்கிறது என்பதுதான் இதன் கருத்து. பாடசாலைகள் எல்லாம் உங்களுடையதுதான்."

# நுவரேலியாவில் விடுமுறை கழிக்க வருபவர்கள்

## பல பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு

நுவரேலியா, ஞாயிறு

மாதக் கடைசியில் விடுமுறையைக் கழிக்கவரும் பெருந்தொகையான மக்களுக்கு சிறந்த வசதிகளை ஏற்படுத்தும் முயற்சியில் நுவரேலியா மேயர் ஈடுபட்டிருக்கிறார். குதிரைப் பந்தயங்கள் நடத்துவதற்கான ஏற்பாடு ஒரு புறமிருக்க, சமூக ஊழியர்களைக்கொண்டு திட்டக் கமிட்டிகள் பலவும் அமைக்கப்பட்டுள்ளன. ஏப்ரல் 7-ம் தேதி முதல் 30-ம் தேதி வரை களியாட்ட விழா நடத்துவதற்கு விண்ணப்பங்களும் கோரப்பட்டுள்ளன.

படகுப் பந்தயம், மலையேற்றம், பொலிஸ் நாய்க் காட்சி, நடனங்கள், மலர்க் கண்காட்சி, குடிசைத் தொழில் காட்சி, ஆகியனவும் நடத்தப்படவிருக்கின்றன.

### சீனவுடன் நேரடி பேச்சுவார்த்தை இல்லை

#### அயூப்கான் அறிவிப்பு

ராவல்பிண்டி, மார்ச் 25

எல்லைப்புறங்களை நிர்ணயிப்பது சம்பந்தமாக பாகிஸ்தானுக்கும், சீனவுக்குமிடையே நேரடிப் பேச்சுவார்த்தைகள் எதுவும் இப்போது நடைபெறவில்லை என்று பாக். அதிபர் அயூப்கான் நிருபர்களிடம் கூறினார்.

"இந்த விஷயத்தில் பாகிஸ்தான் கருத்து என்ன வென்பதைச் சீனவுக்குத் தெரிவித்திருக்கிறோம். எல்லைப் புறங்கள் நிர்ணய விஷயத்தில் அவர்களுடைய கருத்துக்களைத் தெரிவிக்கும் படியும் கேட்டுக் கொண்டிருக்கிறோம். பாகிஸ்தான் அனுப்பிய குறிப்பை சீன பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது" என்று ஆயூப்கான் சொன்னார்.

பாகிஸ்தானுக்கும், சீனவுக்குமிடையே உள்ள எல்லைக்கோடுகள் இதுவரையில் தெளிவுபடுத்தப்படவில்லை. உண்மையில் அம்மாதிரி எல்லைக் கோடுகள் இருக்கின்றன. நம்முடைய தேசப் படங்களில் பாகிஸ்தானில் சில இடங்கள் குறிப்பிட்டுக் காட்டப்பட்டிருக்கின்றன. அவர்களுடைய தேசப் படங்களில் என்ன காட்டப் பட்டிருக்கின்றன வென்பது நமக்குத் தெரியாது. ஆனல், நம்முடைய பகுதிகள் மீது அவர்கள் உரிமை கொண்டாடவுமில்லை; அவர்களுடைய பகுதிகள் மீதும் நாம் உரிமை கொண்டாடவில்லை என்றார்.

### "போகாதே, போகாதே என் கணவா"

சதாம் (பிரிட்டன்), மார்ச் 25

பிரிட்டிஷ் கடற்படையைச் சேர்ந்த சிப்பந்தியொருவர் தூரகிழக்குப் பகுதிக்கு மாற்றப்பட்டுச் செல்வதை ஆட்சேபித்து அவர் மனைவி உண்ணு விரதமிருந்தார். அவர் கடற்படையிலிருந்து விடுவிக்கும் வரை சாப்பிட மறுத்து வந்தார். அந்த சிப்பந்தி தம்முடைய குழந்தையை எடுத்துக் கொண்டு வேலைக்கு வந்தார். இது இம்மாத ஆரம்பத்தில் நடைபெற்றது.

அவர் கடற்படையிலிருந்து விடுவிக்கப்பட்டதாகக் கடற்படைத் தலைமைக் காரியாலயம் அறிவித்தது. மனிதாபிமான காரணங்களுக்காக அவர் விடுவிக்கப்பட்டதாக அது அறிவித்தது. அவரை விடுவிக்க வைத்திய ரீதியில் போதிய காரணங்கள் இருப்பதாகவும் அது கூறியது.

இவர் குழந்தையை எடுத்துக்கொண்டு வேலைக்குப் போனது சம்பந்தமாக காமன்ஸ் சபையில் கேள்விகள் எழுந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

### கல்லூரி தமிழ் கமிட்டி ஏப். 1 முதல் ரத்து

சென்னை, மார்ச் 25

ஏப்ரல் முதலிலிருந்து கல்லூரி தமிழ் கமிட்டியை ரத்து செய்து ராஜ்ய அரசாங்கம் உத்தரவு பிறப்பித்தது.

கல்லூரிகளில் பட்டப்படிப்புகளில் தமிழை போதனு மொழியாக்குவது சம்பந்தமாக அரசாங்க கொள்கையை அமுலாக்குவது குறித்து ஆலோசனை கூறும் பொருட்டு இக்கமிட்டி மூன்று ஆண்டுகளுக்கு முன் அமைக்கப்பட்டது.

தமிழ் அபிவிருத்தி ஆராய்ச்சிக் கவுன்சிலின் சிபார்சின்படி கல்லூரி கமிட்டியின் அலுவல்களை ஸ்ரீ ஜி. ஆர். தாமோதரன் தலைமையில் புதிதாக அமைக்கப்பட்ட தமிழ் வெளியீடுகள் ஸ்தாபனம் மேற்கொள்ளும். [illegible] கல்லூரி தமிழ் கமிட்டி இதுவரை 34 நூல்களையும், வரலாறு முதலிய துறைகளில் 29 புத்தகங்களையும் விஞ்ஞான பாடங்களில் 5 புத்தகங்களையும் தயாரித்துள்ளது.

### வேலியே பயிரை மேய்ந்தது!

பம்பாய், மார்ச் 5

வழிப்பறி நடத்தியதற்காக ஒரு பொலிஸ் கான்ஸ்டபிள் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

இரவில் சர்க்கஸுக்குச் சென்றுவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்த ஒரு தம்பதிகளை வழிமறித்து, அவர்கள் மது அருந்தியிருப்பதாக எதிரி குற்றஞ் சாட்டினராம் அதன்மீது வாக்குவாதம் நடைபெற்றது. இடற்கிடையே கான்ஸ்டபிள் பெண்ணின் கழுத்திலிருந்த அட்டிகையைப் பறித்துக் கொண்டு மறைந்துவிட்டார்.

பிறகு பொலிஸார் சந்தேகிக்கப்பட்ட கான்ஸ்டபிளின் வீட்டைச் சோதனையிட்டு, ரூ. 6,000 மதிப்புள்ள பவுண்டன் பேனக்களையும், மற்றப் பொருள்களையும் கைப்பற்றினர்.

கான்ஸ்டபிள் கைது செய்யப்பட்டார்.

### எம். எல். ஏ. மீது கல்லெறி

கடலூர், மார்ச் 25

சென்னை அசெம்பிளி மெம்பர் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி (தி. மு. க.) திருவதி என்ற ஊரில் ஒரு கூட்டத்தில்பேசும் போது கல் வீசப்பட்டதாகவும் அதனுல் அவர் காயமடைந்ததாகவும் செய்தி கிடைத்திருக்கிறது. ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி சிகிச்சைக்காக பண்ருட்டி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கிறார்.

கூட்டம் நடந்த இடத்தில் தி. மு. க கொடியை உயர்த்தவேண்டுமென்று அவர்கள் சொன்னதாகவும் இதைச் சிலர் ஆட்சேபித்ததாகவும் சொல்லப்படுகிறது. கொடி உயர்த்தப்பட்டபோது கூட்டத்தினர் கற்களை வீசினர். இதனுல் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்திக்கும் மற்றும் சிலருக்கும் காயம் ஏற்பட்டது.

### ஆசிரியர்கள் பயிற்சி பிரதேச கல்லூரி

#### ஜூன் மாதத்தில் ஆரம்பமாகும்

பெங்களூர், மார்ச் 25

இந்திய அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்படவிருக்கும் ஆசிரியர்கள் பயிற்சி பிரதேச கல்லூரி ஜூன் மாதம் முதல் மைசூரில் இயங்க ஆரம்பிக்குமென்று முதன்மந்திரி ஸ்ரீ காந்தி நிருபர்களிடம் தெரிவித்தார். இதற்காக மைசூர் அரசாங்கம் இலவசமாக 100 ஏக்கர் நிலம் கொடுக்கத் தீர்மானித்திருக்கிறார்கள். இந்த கல்லூரிக்கு ஒன்றரைக்கோடி ரூபாய்க்குமேல் செலவாகுமென்று நம்பப்படுகிறது.

### பல்கலைக்கழக செனட் தீர்மானம்

கண்டி, சனி

பேராதனைப் பல்கலைக் கழக கலைப்பகுதி பட்டதாரி மாணவர்களின் முதலாம் ஆண்டுப் பரீட்சை இதுவரை வருடமொன்றில் இருதடவைகள் நடைபெற்று வந்தன. மார்ச் மாதப் பரீட்சையில் தேருத மாணவர்கள் ஜூன் மாதத்தில் நடைபெறும் பரீட்சைக்குத் தோற்றிவந்தார்கள். அடுத்த ஆண்டு தொடக்கம் முதல் வருட மாணவருக்கான ஜூன்மாதப் பரீட்சையை ரத்துச் செய்யப் பல்கலைக்கழக செனட் தீர்மானித்துள்ளது.

பல்கலைக்கழகத்திலுள்ள கலைப்பகுதித் துறையினரும் கொண்டுவந்த பிரேரணை ஒன்றைத் தொடர்ந்து பல்கலைக் கழக செனட் மேற்படி தீர்மானம் செய்துள்ளது. பேராசிரியர் ஓ. எச். டி. ஏ விஜேசேகராவும், டாக்டர் எச். பசேயும் பிரேரணையைத் தொடக்கிவைத்தார்கள்.

# மத்திய கல்லூரி வீரர் மூவர் மிகச் சிறந்த பரிசில் பெற்றனர்

## வெற்றி தோல்வியின்றி முடிவடைந்த கிரிக்கட் போட்டி

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் மத்தியகல்லூரிக்குமிடையே கடந்த வெள்ளிக்கிழமை, சனிக்கிழமை ஆகிய இரு நாட்களிலும் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற 64-வது வருடாந்த கிரிக்கெட்போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

**4 சிறந்த பரிசுகள்**

மத்தியட்சர்களால் வழங்கப்படும் நான்கு சிறந்த பரிசில்களை 3 பரிசில்களை மத்திய கல்லூரியும் ஒரு பரிசை சென். ஜோன்ஸ் கல்லூரியும் சுவீகரித்துக்கொண்டன. மிகச் சிறந்த பந்து வீசுபவருக்கான பரிசு சென். ஜோன்ஸ் கல்லூரி வீரரான டபிள்யு டி. ராஜ்குமாருக்கு வழங்கப்பட்டது. மத்தியகல்லூரியைச் சேர்ந்த காப்டன் ஜே. கனகநாயகம், டி. தருமராசா, வி. சிவபோதிநாதன் ஆகியோருக்கு முறையே எல்லா வகையிலும் மிகச்சிறந்த வீரர், மிகச்சிறந்த துடுப்பெடுத்தாடும் வீரர், மிகச் சிறந்த பந்து பொறுக்கும் வீரர் ஆகியவற்றுக்கான பரிசுகள் கிடைத்தன.

கடந்த சில நாட்களாக விழாக் கோலம் பூண்டு போர்க்களமாக மாறியிருந்த மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் எதிர்பாராத இந்த முடிவு இரு கோஷ்டிகளுக்கும் பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமையிலும் பார்க்க இரண்டாவது நாளான சனிக்கிழமை பெருந்தொகையான ரசிகர்கள் இந்த ஆட்டத்தைப் பார்க்கச் சென்றனர்.

முதலாவது இன்னிங்சில் மத்திய கல்லூரி எல்லா விக்கெட்டுகளையும் இழந்து 87 ஓட்டங்களையும் சென். ஜோன்ஸ் கல்லூரி எல்லா விக்கெட்டுகளையும் இழந்து 156 ஓட்டங்களையும் பெற்றிருந்தது.

இரண்டாவது இன்னிங்சில் மத்திய கல்லூரி 8 விக்கட் நஷ்டத்திற்கு 244 ஓட்டங்களைப் பெற்றதோடு ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது. 175 ஓட்டங்கள் சமப்புள்ளிகளைப் பெறுவதற்கு இருந்தபோது சென்ஜோன்ஸ் கல்லூரி இரண்டாவது இன்னிங்சில் 8 விக்கட் நஷ்டத்திற்கு 113 ஓட்டங்களைப் பெற்றதோடு ஆட்டம் முடிவடைந்தது. இதனுல் இவ்வாண்டு கிரிக்கெட் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

### தொழிலாளர் சங்கடம்

வாஷிங்டன், மார்ச் 25

கியூபாவிலுள்ள நிக்காரோ என்ற இடத்தில் யு. எஸ். ஸுக்கு சொந்தமான நிக்கல் தொழிற்சாலை ஒன்றிருக்கிறது. அதில் கியூபா பிரஜைகள் உட்பட பலர் வேலை செய்கிறார்கள். இவர்களுடைய விடுமுறைச் சம்பளம் கிறிஸ்மஸ பண்டிகை போனஸ முதலியவைகளுக்காக யு. எஸ சார்பில் 3,52,000 டாலர்களுக்கு ஒரு செக் கொடுக்கப்பட்டிருந்தது. அந்த செக் 1960 அக்டோபர் 24ந் திகதியன்று ராயல் பாங்க் ஆப் கானடாவுக்கு அனுப்பப்பட்டது அதே தினத்தில் நிகாரோ நிக்கல் தொழிற்சாலையை கியூபா அரசாங்கம் எடுத்துக் கொண்டுவிட்டதாக அறிவிக்கப்பட்டது.

### எல்லையில் பாகிஸ்தான் அகழி தோண்டுகிறது

கல்கத்தா, மார்ச் 25

மேற்கு டினஜ்பூர் ஜில்லாவில் இந்தியா-பாக் எல்லையில் பாகிஸ்தானிய துருப்புகள் அகழிகள் தோண்டிக் கொண்டிருப்பதாகத் தகவல் கிடைத்திருக்கிறது.

இந்த இடங்களில் இந்திய எல்லைப் பொலிஸாருக்கும் பாக் துருப்புகளுக்குமிடையே மோதல்கள் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. ஆனல் இந்தத் தகவல்கள் ஊர்ஜிதம் செய்யப்படவில்லை.

எல்லைப்புற சம்பவங்களைத் தவிர்ப்பதற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளைப் பற்றி இந்தியா பாக்-எல்லைப்புற பொலிஸ் அதிகாரிகள் பேச்சு நடத்திக்கொண்டிருக்கின்றனர்.

### குழாயடியில் குடங்கள் திருட்டு

சிவகாசி, மார்ச் 25

குடி தண்ணீர் பிடிப்பதற்காக வைக்கப்பட்டிருந்த குடங்களில் சிலவற்றை சிவகாசியில் திருடியதாக மஸ்தான் என்பவரை சிவகாசி சப் இன்ஸ்பெக்டர் ஸ்ரீ விவேகானந்தம் கைது செய்தார்.

இந்நபரை விசாரித்ததில் பட்டப்பகலில் சிவகாசியில் பல இடங்களில் குழாயடியிலிருந்த குடங்களில் 6 குடங்களையும், 1 செம்புப் பானையையும் தான் திருடியதாகக் கூறினராம். திருட்டுப்போன சாமான்கள் கைப்பற்றப்பட்டன. எதிரி சாத்தூர் சப் ஜெயிலுக்கு அனுப்பப்பட்டார்.

### மத்திய மந்திரி சபை கடைசிக் கூட்டம்

புதுடில்லி, மார்ச். 25

லோக சபை கலைக்கப்படுவதற்கு முந்தைய தினம் அதாவது மார்ச் 30-ந்தேதி யூனியன் மந்திரி சபையின் கடைசிக் கூட்டம் நடைபெறும்.

அன்று காங்கிரஸ் பார்லிமெண்டரி கட்சிக் கூட்டமும் கூட்டப்பட்டிருக்கிறது. பிரதம மந்திரி நேரு மார்ச் 31ந் தேதி தனது ராஜினமாவை ராஷ்டிரபதியிடம் சமர்ப்பிக்கலாம் என நம்பப்படுகிறது. ஆனல் புது மந்திரி சபை அமைக்கப்படும் வரை அவர் பதவியில் நீடிக்கக் கோரப்படுவார். புதிய காங்கிரஸ் பார்லிமெண்டரி கட்சி ஏப்ரல் 3ந் தேதி கூடும். கட்சித் தலைவர் தேர்தல் அன்று நடைபெறும்.

### கார் விபத்தில் மூவருக்கு படுகாயம்

வேலணை, ஞாயிறு

மண்கும்பான் பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் கார் ஒன்று பாதையைவிட்டு தடம் புரண்டது. காருக்குள்ளே இருந்த டிரைவரும் மற்றும் இருவரும் மிகவும் மோசமான நிலையில் ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

### அல்ஜீரிய — ரஷ்யா ராஜீய தொடர்பு

அல்ஜீயர்ஸ், மார்ச் 25

சுதந்திர அல்ஜீரியா ரஷ்யாவுடன் ராஜ்ய தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டுமென்ற திரு. குருஷ்சேவின் யோசனையை அல்ஜீரியா ஏற்றுக் கொண்டுள்ளது.

# 'இரண்டு பிள்ளை பிறந்தும் சீதனம் இல்லை'

## கணவன் முறையீடு

கேகாலை, ஞாயிறு

'நான் 1945-ம் ஆண்டு அக்டோபர் மாதம் விவாகம் செய்தேன். எனக்குத் தரவேண்டிய சீதனப் பணத்தை எனது மாமாவும் மாமியும் இன்னும் தரவில்லை" என்று ஹேவடிவெல என்ற இடத்தைச் சேர்ந்த திரு. எச். பி. அண்டிரிஸ் என்பவர், கேகாலை மாவட்ட நீதிபதி திரு. பி. மாறப்பனை முன்னிலையில் தெரிவித்தார்.

அல்பீனா கிறேஸ் எதிரிசிங்காவை தான், 1945-ம் ஆண்டு விவாகம் செய்தபொழுது, தனக்கு சீதனமாக ரூ. 5,000 கொடுப்பதாக கிறேஸின் தந்தையும், தாயாரும் வாக்களித்திருந்தார்களென்றும், ஆனால் வருடங்கள் பல ஆகியும் சீதனப் பணம் தம் கைக்குக் கிடைக்கவில்லையென்றும் திரு. அண்டிரிஸ் இவ்வழக்கைத் தொடர்ந்திருந்தார்.

சாட்சியமளிக்கையில் அண்டிரிஸ் மேலும் கூறியதாவது:- 1945-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 25 ம் திகதி எனக்கும் கிறேசுக்கும் திருமணம் நடைபெற்றது. சீதனமாக ரூ. 5,000 தருவதாக மனைவியின் தாய் தந்தை என்னிடம் வாக்களித்திருந்தார்கள். முதற் பிள்ளை பிறக்கும் பொழுதுதான் சீதனப் பணம் தருவார்கள். இது தான் வழமை. முதற்பிள்ளை பிறந்து இரண்டாவது பிள்ளையும் பிறந்துவிட்டது. சீதனப் பணம் இன்னும் எனக்குத் தரவில்லை."

மேல்விசாரணை ஏப்ரல் 16 ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

# வயிரவகோவிலில்வாலிபர்பிரேதம்!

## பெரியகடையில் பரிதாப சம்பவம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

இரு பிள்ளைகளின் தந்தையான வாலிபர் ஒருவர் கோவில்படியில் இறந்துகிடக்கக் காணப்பட்டார். யாழ்ப்பாணம் பெரியகடையிலுள்ள வயிரவ கோவில் படியில் இறந்து கிடந்த வாலிபரின் பிரேதம் புங்குடுதீவு இரண்டாம் வட்டாரத்தைச் சேர்ந்த நாகலிங்கம் இராசையா (வயது 35) என்று அடையாளங் கண்டு கொள்ளப்பட்டிருக்கிறது. இச் சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு நடைபெற்றிருக்கிறது.

இவர் இறந்துகிடந்த இடத்திற்கு அணமையில் நச்சுத் திராவகத்தைக் கொண்ட 'டின்' ஒன்றும் காணப்பட்டது.

தான் மனவருத்தத்தினால் இச் செய்கையைச் செய்ததாக இறந்தவர் பொலிசாருக்கு எழுதிவைத்த கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

இறந்தவர் யாழ்ப்பாண நகரிலுள்ள ஒரு கடையில் விற்பனையாளராகக் கடமையாற்றி வந்தாரெனத் தெரிகிறது.

சம்பவம் நடைபெற்ற இரவு தனது முதலாளியின் மகனுடன் சென்று சினிமா பார்த்துவிட்டு வந்ததாகவும், இரவு 11 மணிக்கு உணவு உண்டதாகவும் தெரிகிறது.

யாழ்ப்பாணம் பொலிசார் விசாரணை நடத்தினர்.

திடீர்மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் மரணவிசாரணை நடத்தினர்.

# "முன்னாள் தலைவர் கடும் உழைப்பாளி"

## உப்பு கமிஷன் விசாரணையில் சாட்சியம்

கொழும்பு, ஞாயிறு

"சுருக்கெழுத்தும், தட்டெழுத்தும் என்னால் செய்யமுடியாது என்று நான் கார்ப்பரேஷன் தலைவரிடம் (திரு. திசவீரசிங்கா) கூறியிருந்தேன். நான் டைப்பிஸ்டாகவே நியமிக்கப்பட்டேன். என்றும், சுருக்கெழுத்தாளராக நியமிக்கப்படவில்லை என்றும் நான் அவரிடம் சொன்னேன்."

உப்புக் கார்ப்பரேஷனில் ஊழியராகக் கடமையாற்றும் திருமதி ஆர். ரணசிங்கா நேற்று நடைபெற்ற உப்புக் கமிஷன் விசாரணையின்போது மேற்கண்டவாறு கூறினர்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- இரண்டு வேலைகளையும் ஒன்ருக என்னால் செய்ய முடியாது என்று நான் கூறியதற்கு காரணம், டைப்பிஸ்ட் சம்பளம் மட்டுமே எனக்கு போதுமாக இருந்தது. நான் 1957ம் ஆண்டு ஜூன் மாதம் டைப்பிஸ்ட் குமாஸ்தாவாக நியமிக்கப்பட்டேன்."

விசாரணையின் போது திரு. ஏ. எல். குணசேகரா பின்வருமாறு தெரிவித்தார். "நான் 1957-ம் ஆண்டு உப்புக் கார்ப்பரேஷனில், இன்ஸ்பெக்டராகக் கடமையாற்றினேன். உப்புக் கார்ப்பரேஷனில் முன்னர் தலைவராக இருந்த திரு. திசவீரசிங்கா மிகவும் கடுமையாக உழைப்பவர் அவர் எப்பொழுதும் நேரத்துடன் வேலைக்கு வந்து, நேரம் கழித்துச் செல்வார். பல வேலைகளையும் அவரே செய்வார்."

கமிஷன் முன்னிலையில் பலர் ஆஜராகியிருந்தும் அவர்கள் எவரும் விசாரிக்கப்படவில்லை.

# இன்சூரன்ஸ் கார்ப்பரேஷன் அடைந்துவரும் சாதனை

## 2 கோடிக்குமேல் தொழில் நடத்தியுள்ளது

கொழும்பு, ஞாயிறு

கிராமப் புறங்களிலிருந்தான் இலங்கை இன்சூரன்ஸ் கார்ப்பரேஷனுக்கு அதிக ஆதரவு கிடைத்துள்ளது என்று கார்ப்பரேஷனைச் சேர்ந்த அதிகாரியொருவர் தெரிவித்தார்.

ஜனவரி மாதம் முதல்திகதியிலிருந்து ஆரம்பமான கார்ப்பரேஷன மார்ச் மாதம் 15-ம் திகதிவரை ரூ. 22,299,750 க்கு தொழில் நடத்தியிருக்கிறது. ஜனவரி மாதம் கார்ப்பரேஷன் ரூ. 6,151,750க்கு786 பொலிஸிகளையும் பெப்ரவரி மாதம் ரூ. 8,753,500 க்கு 1,747 பொலிஸிகளையும், இம்மாதம் 15-ம் திகதிவரை ரூ. 5,342,750 க்கு 1,173 பொலிஸிகளையும் விற்பனை செய்துள்ளது. இம் மாத முடிவில் மொத்தம் ரூ. 30,000,000 மதிப்புள்ள தொழில்களைக் கார்ப்பரேஷன் செய்து முடிக்குமென்று தெரிகிறது. தங்களது இலக்கைவிட எதிர்வரும் மாதங்களில் இன்னும் மேலதிகமாக தொழில் செய்ய முடியும் என நம்பப்படுகிறது.

# அம்மைப்பால் குத்திக்கொள்வதே

## நோயைத் தடுக்க வழி

அம்மைப்பால் குத்திக்கொள்வது ஒன்றுதான் அம்மை நோயைக் குணப்படுத்தவும், அந்நோய் வராமல் தடுக்கவும் உள்ள ஒரே வழி. தடுப்பு முறை மருந்துகளில் இது ஒரு வரப்பிரசாதம். இக் கருத்து 100 ஆண்டுகளுக்கு முன்பு, ஒரு பத்திரிகையாளரால் வெளியிடப்பட்டதாகும். சென்ற நூற்றாண்டில் ஐரோப்பாவில் ஏராளமான பேர் அம்மை நோய்க்குப்பலியானர்கள். 1796லேயே ஒரு பிரிட்டிஷ் டாக்டர் இந்த அம்மைப்பாலை உபயோகித்திருக்கிறார்.

1873-ல் 13,000 பேருக்கு மேல் ஜெர்மனியில் இந்நோய் ஏற்பட்டு மாண்டிருக்கின்றனர். 1874-ல் ஜெர்மன் பார்லிமெண்ட் அம்மைப்பால் குத்திக் கொள்வதைக் கட்டாயமாக்கியது. இதன்படி 2 வயதிலும் 12 வயதிலும் ஒவ்வொருவரும் அம்மைக் குத்திக்கொள்ள வேண்டும். மத்திய ஐரோப்பாவில் அம்மை நோய் அடியோடு ஒழிக்கப்பட்டுவிட்டது. ஆனால் துரித விமானப் பயணம் காரணமாக இந்த நோய் ஒரு கண்டத்திலிருந்து மற்றொரு கண்டத்திற்கும் கூட எளிதில் பரவுவது சாத்தியமாகிவிட்டது.

அம்மைநோய் கண்டால் சுமார் 18 நாட்கள் ஒதுக்கி வைக்க வேண்டும். கப்பலில் ஒரு பிரயாணிக்கு அம்மை கண்டால் அக் கப்பல் மஞ்சள் கொடியை பறக்கவிட வேண்டும். அக் கப்பலிலிருந்து பிரயாணிகளோ, மாலுமிகளோ கரையில் இறங்க அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

வெகு தூரத்திலிருந்து விமானத்தில் வரும் பிரயாணிகள் மூலம் இந்த அம்மைநோய் எப்படிப் பரவுகிறது என்பது மேற்கு ஜெர்மனியில் இந்நோய் சமீபத்தில் கண்டதிலிருந்து தெரிய வருகிறது.

1959, 61 ஆகிய வருடங்களில் மேற்கு ஜெர்மனியில் இரண்டொரு பேருக்கு அம்மை கண்டது. இப்போது மேற்கு ஜெர்மன் மக்கள் அம்மை குத்திக் கொள்வதில் சிரத்தை காட்டுகின்றனர். அம்மைக் குத்திக் கொள்வதால் நோய் வராது என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது என்றாலும் அம்மை குத்துவது காரணமாக நோயின் கடுமை தணிந்துவிடும்.

## பாஸ்கட் பந்து போட்டி

யாழ்ப்பாணம், ஞாயிறு

1962-ம் ஆண்டுக்கான அகில இலங்கை பாடசாலைகளின் பாஸ்கட் பந்து விளையாட்டுப் போட்டிகள் யாழ்ப்பாணத்தில் நடைபெறுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. யாழ்ப்பாணச் சரித்திரத்தில் முதன்முறையாக இடம் பெற்று, மின்சாரஒளியில் நடைபெறும் விறுவிறுப்பான இப் போட்டியில் மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கண்டி, காலி கோஷ்டிகள் கலந்து கொள்கின்றன. முழு விபரமும் புதன் கிழமை ஈழநாடு பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

## அர்ஜண்டீனு

லண்டன், மார்ச் 15

அர்ஜண்டீனுவில் கூட்டு அரசாங்கம் ஒன்றை அமைக்கும் முயற்சியில் ஜனுபதி பிராண்டினி தொடர்ந்து முயற்சி செய்து வருகிறார். ராணுவத்துக்கும், ஜனுதிபதிக்குமிடையே சமரசம் செய்து வைக்கும் முயற்சி அங்கு மேற்கொள்ளப்பட்டு வருவதாய் அறிவிக்கப்படுகிறது.

# ரஷ்யாவிலிருந்து வாதநோய்தடுப்புமருந்து

## 25 பெட்டிகள் உதவி

கொழும்பு, ஞாயிறு

25 பெட்டிகளடங்கிய வாதநோய் தடுப்பு மருந்து இன்று கொழும்பு வருகிறது. ரஷ்யாவிலிருந்து அனுப்பப்பட்ட இம்மருந்துபுதுடில்லியிலிருந்து இங்கு வருகிறது. 2 லட்சம் தடவை உட்கொள்ளக்கூடிய மருந்து இதில் அடங்கியுள்ளது. அடுத்த 2 வாரங்களில் மேலும் மருந்துகள் எதிர்பார்க்கப்படுகிறது.

ஆஸ்பத்திரிகளில் இருந்து வெளியேறும் குழந்தைகளுக்கு இடைவிடாது வைத்திய உதவி அளிக்கவேண்டும் என்றும் அப்படிச் செய்தால் 80 சதவிகிதம் பழைய நிலைக்கு அவர்களின் நிலையைத் திருத்த முடியும் எனவும் சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# 60 வயதுவரை கடமையாற்ற சிங்களம் தடையாய் இருக்கக்கூடாது

## ஆசிரியர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஞாயிறு

வித்துவான் எஸ். ஆர். கந்தசாமி தலைமையில் நடைபெற்ற வட இலங்கை தமிழாசிரியர் சங்க விசேஷ செயற்குழு கூட்டத்தில், கீழ்க்கண்ட 5 கோரிக்கைகள் அரசாங்கத்துடன் வற்புறுத்துமாறு கோரி தமிழ் எம். பி. க்களிடம் அவை சமர்ப்பிக்கப்பட்டன.

தமிழாசிரியர்கள் இலங்கையின் எப்பாகத்தில் எத்தகைய பாடசாலைகளில் சேவை செய்பவர்களாக இருப்பினும், அவர்கள் அறுபது வயதுவரையும் சேவையில் தொடர்ந்திருப்பதற்கு அரசாங்க (சிங்கள) மொழியறிவு பெருமை தடையாக இருக்கக்கூடாது. அயலாரின் ஆட்சியின்போதும் இல்லாத இவ்வித ஏற்பாடு சுதந்திர இலங்கையில் ஏற்படுவது மனித வர்க்கத்தின் உரிமையைப் பறிப்பதாகும்.

அரசாங்கம் வகுத்துள்ள புதிய ஏற்பாடுகளின்படி தராதரப் பத்திரமற்ற ஆசிரியர் என்று கருதப்படும் பிரிவில் 55 வயதுக்கு மேற்பட்ட ஆசிரியர் எவரும் இருக்கமாட்டார். இவர்கள் எல்லாரும் 10 வருடத்துக்கு மேற்பட்ட சேவையுடையவர்களாகையால் அதன் பொருட்டு வழங்கப்படும் தராதரப்பத்திரத்துக்கு உரிமையுடையவர்கள். ஆதலால், தராதரப் பத்திரமற்ற ஆசிரியர்கள் எனக்கருதப்பட்டவர்கள் யாவரும் தொடர்ந்து 60 வயதுவரையும் சேவையிலிருக்க வசதியளிக்கப்படவேண்டும்.

தமிழாசிரியர்களாக நியமனம் பெறுதல், சேவையில் இருத்தல், சம்பளப்படியேற்றம் பெறுதல், உத்தியோக உயர்வு பெறுதல் என்பவற்றிற்கு அரசாங்க (சிங்கள) மொழியறிவு பெற்றிருத்தல் வேண்டுமென எக்காலத்தும் வற்புறுத்தப்படக்கூடாது.

பாடசாலைகளை மாற்றி நிறுவுவது பாராளுமன்ற அங்கத்தவர்களதும், ஆசிரியர் சங்கங்களதும், கல்வியில் நாட்டமுள்ள பிற நிறுவனங்களினதும் ஆலோசனைகளைப் பெற்ற பின்னரே இறுதியாகத் திட்டமிடப்படவேண்டும். இதனால் இப்போதுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை குறைவுபடாதிருக்குமாறு கவனம் செலுத்தப்படவேண்டும். இப்போதுள்ள சிரேட்ட பாடசாலைகளிற் சிலவேனும் அத்தரத்தை இழக்காதிருக்கவேண்டும். தலைமையாசிரியர், சிரேட்ட உதவியாசிரியர் பதவிகள் பாதிக்கப்படாதிருக்க வேண்டும்.

உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளில் ஆசிரியர்களாக இருந்த காலத்தே அதாவது அரசாங்கம் பாடசாலைகளை வித்தியாதிபதியின் முகாமைக்குக் கொண்டுவர முன்னரும், பொறுப்பேற்க முன்னரும் எமக்கிருந்த அரசியலுரிமைகள், அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்ற பின்னரும் தொடர்ந்திருக்கவேண்டும்.

## 42 வருட சேவை

கொழும்பு, ஞாயிறு

உதவி தர்மப்பண கமிஷனர் திரு. ஜி. வி. நாயக்கா, ஸ்தல ஸ்தாபன சேவையில் 42 வருடம் கடமையாற்றிய பின் ஓய்வு பெற்ருர் கொழும்பு மேயர், தலைமையில் அவருக்கு ஒரு பிரிவுபசாரம் நடத்தப்பட்டது.


மிகத் திறமையான

பவர்ஸ்

உரங்கள்

கிரிமி நாஸ்தினி தெளிக்கும் யந்திரங்களும்

லாபகரமாய் பயிரிட

- புகையிலை
- வெங்காயம்
- மிளகாய்
- மரக்கறி
- நெல்
- வாழை

மற்றும் பழவகைகளும்

கிடைக்குமிடம்

ஏ. பவர்

அன் கொம்பனி லிமிட்டெட்,

த. பெ. 11, கொழும்பு.

# ஆரோக்கியமுள்ளவர்களே நாட்டுக்கு அவசியம்

—சுகாதார மந்திரி

மட்டக்களப்பு, சனி

"தேக ஆரோக்கியமும் திடசித்தமும்உள்ள மக்களை உண்டு பண்ணாம் தவறுவோமானல், ஏனைய அபிவிருத்தி, முயற்சிகள் யாவும் தாமதமாகி விடும். நோய்களுக்குச் சிகிச்சை வழங்கும் வசதிகளை ஏற்படுத்தியபோதிலும் தேக சுகத்தையும் ஆரோக்கியத்தையும் பாதுகாப்பது இங்கு மிகவும் அவசியமாகின்றது."

இவ்வாறு சுகாதார மந்திரி செனட்டர் ஏ பி. ஜயசூரியா மட்டக்களப்பில் சுகாதார விழா ஒன்றைத் தொடக்கி வைத்துப் பேசுகையில் கூறினர். மலர் மாலை சூட்டி மந்திரி வரவழைக்கப்பட்டார்.

திரு. ஜயசூரியா பேசுகையில் தமிழ் மொழியில் தம்மால் பேச இயலாததற்கு, வருத்தம் தெரிவித்தார். தொடர்ந்து பேசுகையில் அவர் கூறியதாவது:-

"சுகாதாரக் கல்வி நாட்டு மக்களுக்கு மிகவும் அவசியமாகின்றது. சுகாதாரக் கல்வி அளிக்கப்பட்டால் நாட்டில் இன்று நிறைந்துள்ள மருந்துச்சாலைகளையும் சிகிச்சை நிலையங்களையும் குறைத்துக் கொள்ளலாம். மேலதிகமான மருந்துச் சாலைகள் இந்நாட்டில் இருந்து வருகின்றன என்பது எனது அபிப்பிராயம்.

நாட்டைப் பாதுகாப்பதில் குறிப்பாக இரண்டு இலாகாக்களுக்கு அதிகம் பங்குண்டு. ஒன்று, சுகாதார இலாகா மற்றையது, கல்வி இலாகா. நல்ல உடற்கட்டினல் மட்டும் நாட்டு மக்கள் நலன்பெற்றுவிட முடியாது. நாட்டின் முன்னேற்றத்துக்கு மக்களிடையே நல்ல அறிவும் தேக திடமும் தேவைப்படுகின்றன.

சுகாதார சேவை சுப்ரீண்டன் டாக்டர் கே. சிவஞானரத்னமும் சொற்பொழிவாற்றினர். மட்டக்களப்புத் தமிழ் எம். பி.க்கள் சுகாதார விழாவில் பங்குபற்றிக் கொள்ளவில்லை.

## மதுவிலக்கை பரப்புவதே கொள்கை

புதுடில்லி, மார்ச் 25

மதுவிலக்கை மேலும், மேலும் பரப்புவதே மத்திய அரசாங்கத்தின் உத்தேசம் என்றும், ஆனல்ராஜ்ய அரசாங்கங்களே இதற்கு வழிசெய்ய வேண்டும் என்றும் நிதி மந்திரி திரு மொரார்ஜி தேசாய் கூறினர். மத்திய அரசாங்கம் இதற்கு உதவி அளிக்கும் என்றும் அவர் கூறினர்.

## ஸ்ரீ சித்தி விநாயகர் கோவில் மகா கும்பாபிஷேகம்

மட்டக்களப்பு, ஞாயிறு

மட்டக்களப்பு பெரிய கல்லாறு, ஸ்ரீ சர்வார்த்த சித்தி விநாயகர் கோவில் மகா கும்பாபிசேகம் இன்று திங்கட்கிழமை நடைபெறும்.

## ஏரியில் மிதந்த பிரேதம்

நுவரேலியா, ஞாயிறு

22 வயதான ஒரு வாலிபரின் பிரேதம் நுவரேலியா ஏரியில் மிதக்கக் காணப்பட்டது. இனம் தெரியாத இவர் ஒரு தமிழ் இளைஞராய் இருக்கக் கூடுமென பொலிஸார் தெரிவித்தனர். முழுக்கை சட்டையும், வெள்ளை சாரமும் அவர் உடுத்திருந்தார்.

## கண்ட்ராக்டர் உடல்நிலை

பார்படோஸ், மார்ச் 25

இந்தியக் கிரிக்கெட் கோஷ்டியின் காப்டனை கண்ட்ராக்டரின் உடல்நிலை அபிவிருத்தியடைந்து வருவதாய் அறிவிக்கப்படுகிறது.

## புதிய சுப்ரீம் கோர்ட் நீதிபதி

கொழும்பு, ஞாயிறு

பதில் அட்டோர்னி ஜெனரலும், லஞ்ச கமிஷனருமான திரு. ஏ. டபிள்யு. எச். அபயசுந்தரா கியு. ஸி, சுப்றீம் கோர்ட் நீதியரசராக நியமிக்கப்பட்டுள்ளார். நாளைதொடக்கம் ஏப்ரல் மாதம் 19-ம் திகதிவரை அவர் தற்காலிக சுப்றிம்கோர்ட் நீதியரசராகக் கடமையாற்றுவார்.

நீதியரசர் சின்னத்தம்பி ஓய்வுபெறுவதை முன்னிட்டு ஏற்பட்ட காலிஸ்தானத்தை நிரப்பும் முகமாக, திரு. அபயசுந்தரா நியமிக்கப்பட்டுள்ளார். 20-ம் தேதிக்குப்பின் அவர் நிரந்தரமாக நியமனம் பெறுவார்.

## வானெலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.)

திங்கள் 26-3-62

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவ நற்சிந்தனை, 6-55 சைவ நற்சிந்தனை, 6-55½ கிறிஸ்தவ நற்சிந்தனை, 7-15 காலைக்கதிர், 7-30 திரை இசை, 8-00 கிளாரினட், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15நிலையஒலிப்பதிவுகள், 5-45 திரை இசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வாத்தியக்கோஷ்டி.

இரவு 7-00 நேயர்விருப்பம், 7-30 சத்தியவதி இராஜூ-வீணை, 8-00 முஸ்லீம்கநிழ்ச்சி, 9-12 தமிழ் மூலம் சிங்களம்-25, 9-30 குரல்வகை, 9-45 எஸ். எஸ். இரத்தினம்பிள்ளை-பாட்டு.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15.)

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 திருக்கோயிலூர் எஸ். அலுமேலு அர்ஜுனன் - பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 என். வீராசாமி - கிளாரினட், 1-30 குரல்இசை, 1-50 வாத்திய இசை, 2-10 தொழிலைத் தேர்ந்தெடுக்க - மாணவர் நிகழ்ச்சி, 2-30 டி. பி ராமகிருஷ்ணன் - பாட்டு.

மாலை 4-45 விவிதபாரதி(கர்நாடகசங்கீதம்) 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராமநிகழ்ச்சிகள்

இரவு 7-30 இம்மாதப் பாடல், 7-35 நல்லுரை, 7-40 திரைப்படஇசை, 8-00 திருக்கோயிலூர் எஸ். அலுமேலு - அர்ஜுனன் - பாட்டு, 8-30 டி. பி. ராமகிருஷ்ணன் - பாட்டு, 9-15 இளைஞர் குரல் - கதம்ப நிகழ்ச்சி.


நான் விரும்புவது

நெஸ்டோமோல்ட்

அது எனக்கு எவ்வளவோ நன்மையளிக்கின்றது...




நெஸ்டோமோல்ட் ஒரு உன்னத பால் ஆகாரம். இது மோல்ட்டட் பார்லி மற்றும் கோதுமை மாவுடன் முழுப் பாற்கட்டிகளை ஒன்று சேர்த்து கவனமாகத் தயாரிக்கப்பட்ட ஒரு உற்பத்தியாகும். இதில் விட்டமின் A B2, மற்றும் E அதோடு கல்ஸியம், மக்னீஸியம் ஆகியவற்றின் பெறுமதியான ஓர்கனிக் பொஸ்பேட்டுகள்மற்றும் ஒவ்வொரு அவுன்ஸ் பவுடருக்கும் 37 மேலதிக விட்டமின் B சத்துக்கள் உள்ளன.

உற்பத்தி செய்து உத்தரவாதமளிப்பவர்கள்

நெஸில்ஸ்

இலவச சாம்பிள்

இலவச நெஸ்டோமோல்ட் சாம்பிளைப் பெற உங்களது பெயர் விலாசத்தையும் அதோடு தபால் கட்டணமாக 25 சதத்திற்கு முத்திரைகளும் அனுப்பி வைக்கவும்.

நெஸில்ஸ் புரொடக்ஸ் (சிலோன்) லிமிட்டெட்
த. பெ 189,
கொழும்பு.

குழந்தைகள், வாலிபர், குடும்பப் பெண்கள் ஆகிய எல்லோருமே விரும்பி அருந்தும்இந்த நெஸ்டோமோல்ட் அபார நன்மை அளிக்க வல்லது. சூடானலென்ன, ஐஸ் போன்ற குளிர்மையானலென்ன, இழந்த சக்தியை மீட்டுத் தரவும் ஊக்கமூட்டவும் சுவை நிரம்பிய நெஸ்டோமோல்டுக்கு நிகர் எதுவுமே கிடையாது. நெஸ்டோமோல்டில் ஒரு ஆச்சர்யமென்னவென்றல், உங்களுக்கு நன்மையானவை யாவும் அதில் அடங்கியிருப்பதுதான். இத்தனைக்கும் அதன் சுவை ஒரு தனி ரகம்.

நெஸ்டோமோல்ட்

விட்டமின் B அடங்கியது

# தோட்டப் பாடசாலை ஆசிரியர்கள் பயிற்சிபெற அனுமதிக்கவேண்டும்

யாழ்ப்பாணம், திங்கள்

தோட்டப் பாடசாலை ஆசிரியர்களையும் ஆசிரியர்களாகவே மதித்து அவர்களையும் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைப் பிரவேச பரீட்சைக்குத் தோற்றுவதற்கு வித்தியாதிபதி அனுமதிஅளிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

யாழ்ப்பாணம் அரசினர் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற அகில இலங்கை அரசினர் தமிழாசிரியர் சங்க வடபகுதிக்கிளையின் வருடாந்த மகாநாட்டில் மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப் பெற்றது.

மகாநாட்டில் கீழ்க்கண்ட பிரேரணைகளும் நிறைவேற்றப்பட்டன:-

ஒவ்வொரு ஆசிரியரும் தத்தம் கிராமங்களில் மிகக் குறைந்த அளவு காலமாவது சேவைபுரிய சந்தர்ப்பம் அளிக்கப்படல்வேண்டும்.

வடமாகாணத்திலுள்ள பாடசாலைகளில் பெண் ஆசிரியர்கள் தேவைக்கு மிஞ்சியிருக்கிருர்கள். ஏனைய மாகாணங்களிலுள்ள பாடசாலைகளில் பெண் ஆசிரியைகள் இல்லாதிருப்பதனுல் இப் பற்ருக்குறையை நிவிர்த்திக்கவும், தமிழ்ச் சிறுமிகளின் நலம் கருதியும் இவர்கள் அங்கு மாற்றப்படல் வேண்டும்.

---

## சாஸ்திரி காயமடைந்தார்

புதுடில்லி, மார்ச் 25

இந்திய உள்நாட்டு மந்திரி திரு. லால்பகதூர் சாஸ்திரி இன்று மோட்டார்கார் விபத்தொன்றில்தோள்மூட்டில் காயமடைந்தார். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகிருர். கவலைப்படுவதற்கு ஒன்றுமில்லையென டாக்டர்கள் தெரிவித்தனர்.

---

## 'தேசியகல்வித்திட்டம்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கப் பாடசாலைகள் உதவ வேண்டும்.

தலைமை வகித்த திரு. டி. எம். சுவாம்பிள்ளை தமது தலைமையுரையில் கூறியதாவது:-

ஆசிரியர்களுடைய கடமை மிகப் பெரிது. எழுத்தறிவித்தவன் இறைவனுகும் என்ருங்கு பண்புமிக்க ஸ்தானத்திலுள்ள ஆசிரியர்கள் தமது உரிமைகளை உரிமையென நினைக்கவேண்டும். மற்றவர்களைப்பற்றிக்குறை சொல்லும் பழக்கம் ஒழியவேண்டும். தீய குணத்திலிருந்து விடுபடவேண்டும். இது நமது பண்பைக் கெடுத்து விடும் என்பதனை நாம் உணர வேண்டும்.

வித்துவான் க. கார்த்திகேயன் இலக்கியம் கற்பித்தல் என்பது பற்றிப் பேசுகையிற் குறிப்பிட்டதாவது:-

மாணவனுக்கு இலக்கியங் கற்பிக்குமுன்னர் அது அந்த மாணவனின் அனுபவத்திற்கு வருமா என்பது பற்றி முதலில் நுாகுவி ஆராய வேண்டும். இலக்கியம் ஒழுக்கத்திற்கே முதலிடம் கொடுப்பதனுல் அது கற்பிக்கப்படுகின்றபோது உயர்ந்த பண்பு கவனிக்கப்படவேண்டும். நல்ல நூல்களை நல்லெண்ணத்துடன் கல்லாசிரியர்களிடம் பயிலவேண்டும்.

---

## மொழிகளைப் பயிற்ற புதிய வழி

லண்டன், மார்ச் 25

லண்டனிலுள்ள தொழில்நுட்பக் கல்லூரி, மாணவர்களுக்கு மொழிகளைப் பயிற்றுவிக்க புதிய வழியொன்றைக் கையாளத் தொடங்கியுள்ளது.

இதன்படி, ஆசிரியர் பயிற்றுவிப்பதை மாணவன் காதில் பொருத்தப்பட்ட

## யூனியன் கல்லூரி வெற்றி

தெல்லிப்பழை, ஞாயிறு

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் கொக்குவில் இந்துக் கல்லூரியும் கலந்துகொண்ட கிரிக்கட் போட்டியில் யூனியன் கல்லூரி 4 விக்கட் வித்தியாசத்தில் வெற்றியீட்டியது.

கொக்குவில் இந்துக்கல்லூரி தனது முதல் இன்னிங்சில் 41 ஓட்டங்களும், இரண்டாம் இன்னிங்சில் 101 ஓட்டங்களும் எடுத்தது. யூனியன் கல்லூரி முதலின்னிங்சில் 125 ரன்களும் இரண்டாம் இன்னிங்சில் 6விக்கட் நஷ்டத்திற்கு 14 3ரன்களும் எடுத்தது.

---

## மோட்டார் சயிக்கிள் விபத்து

### ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், திங்கள்

சென்ற சனிக்கிழமை இரவு ஆனைப்பந்தியடியிலுள்ள குருநாதசுவாமிகோவிக்கு முன்னுல் நிகழ்ந்த ஒரு மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

விபத்துக்குள்ளான மோட்டார் சைக்கிளை ஓட்டிவந்தவரே காயமடைந்தார். அவர் செலுத்திவந்த மோட்டார் சைக்கிள் தீப்பிடித்து எரிந்தது. அயலவர்களின் உதவியுடன் தீயணைக்கப்பட்டது.

முன்னுல் சென்றுகொண்டிருந்த மற்ருெரு மோட்டார் சைக்கிள் எதிரே வந்த ஒரு வாகனத்துக்கும் தனக்குமுன்னுல் சென்றுகொண்டிருந்த ஒரு சைக்கிள்காரருக்கும் இடம்கொடுப்பதற்காக நிறுத்தப்பட்டதாகவும் ஆனல் அதற்குப் பின்னுல் வந்துகொண்டிருந்த மோட்டார்சைக்கிள்காரர் இதைக் கவனிக்காமல் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள்மீது மோதிக்கொண்டதால் இந்த விபத்து ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது.

---

## அறிவை வளர்க்க உரிய வழிகள்

பாரிஸ், மார்ச் 25

உலகின் அறியாமையைப் போக்கி அறிவைப்பெருக்க 15 நாட்டிலுள்ள 22நிபுணர்கள் ஆலோசனை தெரிவித்துள்ளனர்.

ரேடியோ, டெலிவிஷன், சினிமா, போதிக்கும் யந்திரங்கள் இவற்றின் துணைகொண்டு உலகில் அறிவைப் பெருக்கலாம் என இவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளார்கள். செயற்கைக்கிரகங்களை இந்த விஷயத்தில் உதவிக்கு வைத்துக்கொள்ளலாம் என்றும் இவர்கள் அபிப்பிராயப்படுகின்றனர்.

ஐ. நா. கல்வி கலாச்சார விஞ்ஞான இயக்கத்தின் ஏற்பாட்டின்படி சமீபத்தில் பாரிஸில் கூடிய இந்த நிபுணர்கள் நவீன கருவிகளைக்கொண்ட நிலையங்களை ஏற்படுத்துவதால் நன்மை ஏற்படும் எனத் தெரிவிக்கிருர்கள்.

---

போன் மூலம் கேட்டு அதை அவர் மீண்டும் ஒலி பெருக்கியில் கூறவேண்டும். இவ் விதம் கூறுவது டேப்ரிக் கார்ட்டில் பதிவு செய்யப்படும். பின்னர் வகுப்பு முடிவுற்றவுடன் இந்த டேப் ரிக்கார்டைப் போட்டுப் பார்த்து தமது பிழைகளை மாணவர் திருத்திக் கொள்ளலாம்.

## குத்தாலத்தில் அரிசி தேக்கம்

### வியாபாரம் மிக மந்தம் கேரள கிராக்கி இல்லை

குத்தாலம், மார்ச் 25

இங்கு அரிசி மில்காரர்கள், அரிசி வியாபாரிகளுக்கு இந்த காலம் ரொம்பசிரமமாக இருக்கும்போல் தோன்றுகிறது. கேரளாவிலிருந்து அரிசிக்குக் கிராக்கி அநேகமாக நின்றுவிட்டது. ஆந்திர வியாபாரிகள் அங்கு நிறைய அரிசியைக்கொண்டுவந்து தள்ளியிருக்கிருர்கள். அரசினர் நியாயவிலைக் கடைகளிலும் நிறைய ஸடாக்குகள் இருக்கின்றன. இதனுல் தஞ்சை அரிசிக்கு கிராக்கி இல்லை.

அரிசிமில் சொந்தக்காரர்களும், வியாபாரிகளும் தங்களால் முடிந்த அளவுக்கு நெல்லை ஸடாக்செய்திருக்கிருர்கள். சில வியாபாரிகள் நெல்லைக் கடனுக்கு விற்பனைசெய்துகொண்டிருக்கிருர்கள். தற்சமயம் ரோக்கபேரம் அநேகமாக நின்றுவிட்டதே இதற்குக்காரணம் பின்னுல் விலை ஏறக்கூடும் என எதிர்பார்த்து நெல்லைக்கட்டிவைத்திருக்கிருர்கள். அறுவடையான நெல்லில் 50 சத விகிதம் இம்மாதிரி கிராமங்களிலேயே கட்டிவைக்கப்பட்டிருக்கிறது என மதிப்பிடப்பட்டுள்ளது. அவசரமாகப் பணத்தேவையுள்ளவர்களே கொஞ்ச அளவில் மார்க்கட்டுக்கு சரக்கை அனுப்புகிருர்கள். வியாபாரிகள் இவைகளை வாங்கி ஸடாக் செய்துவைக்கிருர்கள். விலை 48 படிகள் கொண்ட மூடைக்கு ரகத்துக்குத் தக்கபடி ரூபா 20 விருந்து 20-50 ந. பை.வரை இருக்கிறது.

கட்டை சம்பா புழுங்கல் அரிசி இரண்டு மணங்கு கொண்ட மூடைக்குத் தலா எப். ஓ. ஆர். விலை (புதிய சரக்கு, விற்பனைவரி உட்பட) நாற்பத்துமூன்று ரூபாவிலிருந்து நாற்பத்துமூன்றரை ரூபாவரை இருக்கிறது. ஆனல் சென்ற இரண்டுதினங்களாகப் பேரம் நடக்கவில்லை.

---

## நிலத் தகராறில் கொலை மூன்றுபேருக்கு ஆயுள் தண்டனை

திருநெல்வேலி, மார்ச் 25

எப்போதுவென்ருன் சரகம் கணகப்பட்டியில் நிலத்தகராறு காரணமாக சுப்பையாவும், அவர் மகன் சுப்பிரமணியமும் அரிவாள், வேல், அம்பு சகிதம் தாக்கப்பட்டதாதவும், அதில் சுப்பையா படுகொலை செய்யப்பட்டதாகவும் தொடரப்பட்ட வழக்கில் நெல்லை செஷன்ஸ் நீதிபதி ஸ்ரீ எஸ். ரங்கராஜன் எதிரிகள் மூன்று பேர்களையும் விசாரித்து ஆயுள் தண்டனை விதித்தார்.

பிராசிக்கியூஷன் தரப்பில் ஸ்ரீ பி. எஸ். சுப்பிரமணியம் பிள்ளையும், எதிரிசார்பில் ஸ்ரீ கே. எஸ். பாலாஜியும் ஆஜரானுர்கள்.

---

## மரண அறிவித்தல்

யாழ்ப்பாணம் கச்சேரி சிருப்பர் அ. நடராசா, யாழ்ப்பாணம் தபால் நிலையம் இ. கந்தையா ஆகியோரின் மைத்துனரும், இ. போ. ச. யாழ்ப்பாணப் பிரிவில் பரிசோதகராகக் கடமையாற்றியவருமான தம்பையா இரத்தினம் காலமாகிவிட்டார் அன்னரின் பூதவுடல் இன்று மாலை 4 மணிக்குத் தகனக்கிரிகைக்காகப் பெருமாள் கோவிலடியிலிருந்து கோம்பையன் மனல் மைதானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

அறிவிப்பவர்: இ. கந்தையா
2. ஸ்ரீ வெங்கடேசன் வீதி,
யாழ்ப்பாணம்.

## தமிழ்நாட்டில் மோட்டார் கார் உற்பத்தி

சென்னை மார்ச் 25

தமிழ்நாட்டில் மோட்டார் மின்சார சாதனங்களைத் தயாரிக்கும் மிகப்பெரியதொருதொழிற்சாலை தனியார் துறையில் அமைக்கப்படவிருக்கிறது.

சுமார் 2 கோடி 70 லட்சம் ருபாய் செலவில் பிரிட்டிஷ் நிறுவனமும் தமிழக நிறுவனமும் கூட்டாக ஆரம்பிக்கப்படும் என்று தெரிகிறது- இங்கு தயாரிக்கப்படும் மோட்டார் மின்சார சாதனங்கள் மிக நவீனமுறையில் இருக்குமென்றும்; மோட்டார் தொழிலுக்கான எல்லாத் தேவைகளையும் பூர்த்திசெய்வதே இத்தொழிற்சாலை அமைக்கப்படுவதின் நோக்கமென்றும் கூறப்படுகிறது.

முதலீட்டில் பாதியளவு லூக்காஸ் லிமிட்டெட் இயந்திரங்களாக அளிக்குமென்று தெரிகிறது. புதிய தொழிற்சாலையில் மூன்று லூக்காஸ் பிரதிநிதிகளும, மூன்று டி. வி. எஸ். பிரதிநிதிகளும் டைரக்டர்களாக இருப்பார்கள். டி. வி. எஸ். நிறுவன திரு. டி. எஸ். கிருஷ்ணன் சேர்மனுகவும், லூக்காஸ் நிறுவன திரு. ஜே. டபிள்யு. ஷீல்டு மனேஜிங் டைரக்டராகவுமிருப்பார்கள்.

முதல் உற்பத்தி 1962ம் ஆண்டில் ஆரம்பிக்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வை. எம். ஸி. ஏ. தமிழ் மன்ற ஆண்டுவிழா

சென்னை, மார்ச் 25

வை. எம். ஸி. ஏ. தமிழ் மன்றத்தின் 17-வது ஆண்டு விழாவுக்கு பிரதம மாகாண மாஜிஸ்ரேட் ஸ்ரீ பி. எஸ். சோமசுந்தரம் தலைமை வகித்துப் பேசுகையில் தமிழ் வளர்ச்சிக்காக மன்றம் செய்துள்ள சேவைகளைப் பாராட்டினுர்.

தமிழ் பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு ஸ்ரீ சோமசுந்தரம் பரிசுகள் வழங்கினுர்.

தமிழ் நூல் எழுதியிருக்கும் ஸ்ரீ அரசு, ஸ்ரீ ஆர். பாலகிருஷ்ணன் ஆகியோர் பாராட்டப்பட்டனர். ஸ்ரீ காஞ்சிமணி மொழியார் எம். எல். ஏ.பேசினுர்.

ஆரம்பத்தில் டாக்டர் சிதம்பரநாதன் எம். எல். ஸி. எல்லோரையும் வரவேற்ருர்.

ஸ்ரீ எம். கே. ராசசோரன் வந்தனேபசாரம்கூறினுர்.

---

லாகூர், மார்ச் 25

இருதேசங்களிடையேயுள்ள பிரச்சினைகளுக்கு நல்ல தீர்வுகள் காணமுடியுமாயின் தாம் பாரதப் பிரதமர் திரு. நேருவைச் சந்திக்கத் தயார் எனப் பாகிஸ்தான் ஜனதிபதி அயூப்கான் தெவித்துள்ளார்.


இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு)

பல வீரதீரச் செயல்கள் நிறைந்த
சிறந்த கலர் படம்!
பார்த்து பயன் அடையுங்கள்!



சித்திரா • அசாத்
கிருஷ்ணகுமாரி
நடித்த
ஜிம்போ
(தமிழ், முழுநீள கேவா கலர்ப் படம்)

மனோகரா (யாழ்ப்பாணம்)
மாலை 6-30 இரவு 9-30 க்கு
எம். ஜி. ஆர். - மாதுரிதேவி நடித்த
மந்திரி குமாரி

சனி, ஞாயிறு காலை 10-30 மணிக்கும் கிழமை நாட்களில்
மாலை 4-15 க்கும்
NOTORIUS
(ஆங்கிலம்)


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1962-ம் ஆண்டு மார்ச் மாதம் 6-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.